# காஞ்சி

ஆசிரியர்

அண்ணாதுரை



23-10-66

விலை 20 காசு

# வடக்கும்-தெற்கும்!

தமிழகம் எங்கும் பரவலாக, பெருநகர், சிறு கிராமம் இங்கெல்லாம் ஒரே நாளில் இருபதுக்கு மேற்பட்ட கழகக் கூட்டங்கள் நடைபெற்றுக் கொண்டு வந்த நிகழ்ச்சிகள், மாற்றாருக்கு மன மயக்கத்தையும், மதிமருட்சியையும் கொடுத்து வந்துள்ளன வென்பதை நாம் அறிவோம்.

ஆனால், ஒரே நாளில் வடக்கிலும் தெற்கிலுமாக, சுமார் *405* கல் தொலைவு வேறுபாட்டில் செங்கற்பட்டிலும் தூத்துக்குடியிலும் கழகத்தின் மாநாடு, மிக வெற்றிகாமான முறையில் நடைபெற்றுள்ள நிகழ்ச்சியைக் காணும்போது, காங்கிரசார் என்ன ஆகப்போகிறார்களோ என்பதற்கான பதிலை குழி தோண்டிக் கொண்டிருப்பவர்களிடம் எதிர்பார்த்துவிட்டுவ்டுவோம்.

இரு மாநாட்டு ஊர்வலச் சிறப்பையும்பற்றி எழுதுவதென்றால், ஏடு தாங்காது — சுமை அதிகம் என்பதனால்!

வத்தலக்குண்டு மாநாட்டு ஊர்வலத்தைத் தனி மேடையொன்றில் நின்று கண்டுகளித்த அண்ணா அவர்கள், அனைவரையும் களிக்கச் செய்யும் வகையிலே செங்கை மாநாட்டு ஊர்வலத்தில் கலந்துகொண்ட அந்த வேளையில், தூத்துக்குடியில் நாவலரும், நடராசன் அவர்களும், சத்தியவாணிமுத்து அவர்களும் கலந்துகொண்டு நெல்லை மாவட்ட மக்களை மகிழ்வுக் கடலில் ஆழ்த்தினர்.

கலைஞர் அவர்களே கண்டு பிரமிக்கத்தக்க அளவுக்கு தூத்துக்குடியில் அலங்கார வளைவுகளின் எண்ணிக்கை நகரை அழகுபடுத்திய வேளையில்—

செங்கை மாநகரத்தின் விழாக்கோலம், விசையொடித்த தேகங்களுக்கு வன்மையூட்டிக்கொண்டிருந்தது. செங்கை மாநாட்டுமுகப்பின் வண்ண விளக்கு அலங்காரம், *1967*-ல் தமிழகம் பெற்று விளங்கப்போகும் 'ஒளி'ப் பிரவாகம் போல்-கற்பனைகளுக்கு எட்டாமல் தவறு, தவறு அடங்காமல் நிற்கும் பெற்றிமைவாய்ந்தது. பெருமழையின் காரணமாகக் கடந்த கிழமை செங்கை மாநாடு தள்ளிவைக்கப்பட்டதிலும், ஒரு பொருள் உண்டு என்பதை மாநிலத்தவர்க்கு விளக்கிக்காட்டும் முறையில், மாநாட்டுத் திடலையொட்டித் தேங்கிக்கிடந்த நீர்த் திட்டுக்களில் பட்டுத் தெறித்துக்கொண்டிருந்த ஒளிப் பிழம்புகள், மெய்மறக்கச்செய்தன. சற்றுத் தொலைவில் நின்று பார்க்கையில், அக்காட்சி, சிருங்காரத் தடாகத்தில் சிந்தை கிளர்த்தும், செழுமிய தெப்பம்போல் காணப்பட்ட காட்சியைக் காணத்தவறிய கண்கள், களிக்க இயலாதவை என்பதில் மிகையில்லை!

இவ்வளவு சிறப்பையடக்கிய செஙகை மாநாட்டில் **மாயூரம் கிட்டப்பா** கொடியேற்றிவைத்து, கொடிச் சிறப்பு குறித்தும், அதன் தோற்றத்திற்கு நல்கப்பட்டுள்ள குருதிகள் குறித்தும் அரிய உரை நிகழ்த்திய அதேவேளையில் நெல்லையில், தமிழரசி பி. ஏ. கொடியேற்றிவைத்து அரும்உரையாற்றினர்.

செங்கை மாநாட்டைத் திறந்துவைத்து புலவர் **கோவிந்தன்** பேசுகையில், அண்ணா அவர்கள் ஒருமுறை சிறை செல்கையில் அவரிடம் பேனா, மைக்கூடு, காகிதம் தரப்பட்டதாகவும், சிறந்த இலக்கியமொன்று சமைத்துத்தரும்படிக் கோரியதாகவும், அண்ணா அவர்கள் தான் சிறைமீண்டு வரும்போது, முன்னையிலும் அதிகமாக கழகக் கருத்துக்களைப் பரப்பி கழகத்தை வளரச் செய்துவிட்டால் அதுவே சிறந்த இலக்கிய நிலை என்றும், அவ்வாறில்லையென்றால் தரப்பட்ட காகிதத்தில் **'நம்பிக் கெட்டேன்'** என்று எழுதித்தருவேன் எனக் கூறியதாகவும், அதேபோல் செங்கை மாவட்டத்தில் *67* தேர்தலில், நாமெல்லாம் அரும்பணியாற்றி, முழு வெற்றிக்கு அரும்பணியாற்ற வேண்டுமெனவும், அண்ணா அவர்கள் மீண்டும், நம்மைப்பார்த்து 'நம்பிக்கெட்டேன்'- என்று கூறும் நிலைமையைத் தோற்றுவித்துவிடக் கூடாது என்றும் கூறியபோது மெய்சிலிர்த்த அதே நேரம்—

நெல்லையில் திறப்புரையாற்றிய வழக்கறிஞர் **மாதவன்**, காங்கிரசாரின் கொடுங்கோன்மை மிக்க ஆட்சியால் மக்கள் சாவுக்காடு நோக்கி நடைபோடத் தொடங்கும் அவல நிலைமையைத் தோற்றுவித்த காரணங்களை அடுக்கிக்காட்டி — இக்கொடுமைகளைக் களைய திட்டம் தீட்டும் மாநாட்டைத் திறந்து வைப்பதாக அழகுபட வருணித்தார்!

செங்கையில், வரவேற்றுப்பேசிய **சி. வி. எம். அண்ணாமலை**, பெருநிதியைத் தேர்தல நிதியாகத் தரமுடியாமற்போன செங்கை, பெரும்பான்மைச் சட்டமன்ற உறுப்பினர்களைத் தருவதாக வாக்குறுதியளித்ததற்கு ஏற்ப, இதுவரை மாநாட்டு வசூலில் முதன்மை இடத்தைப் பிடித்துக்கொடுத்துள்ளார் என்பது, *67*-லும் வெற்றி உறுதி என்பதற்கு எடுத்துக்காட்டாக அமைந்தது—என மக்கள் பேசிக்கொண்டிருந்த வேளையில்,

தூத்துக்குடியில் வரவேற்ற **சிவசாமி**, கழகத்தின் ஒளிமிக்க எதிர்காலத்தை விளக்கிககாட்டி, போலி சோசலிசம் பேசிக்கொண்டு **ஜனநாயக சர்வாதிகாரம்** புரியும் சழக்கர் ஆட்சியைச் சரித்துச் சாய்க்க, வாரீர்! வாரீர்!! என அன்பழைப்பு விடுத்தார்.

நெல்லையில் தலைமையேற்ற மேயர் **மோசஸ்**, சோற்றுக்கு வழி கேட்டால் காங்கிரசார் வானத்தைக் காட்டும் நிலை நீடிக்குமானால் *1967*-ல் மக்கள் காங்கிரசுக்கு, வங்காள விரிகுடாவைக் காட்டிவிடுவார்கள் என்றபோது, கைதட்டல்களால் வானம் அதிர்ந்ததேபோல்-

செங்கையில் தலைமையேற்ற **வி. கிருஷ்ணமூர்த்தி**, பண்பாடுள்ள எதிர்கட்சி தேவையெனப் பேசித் திரியும் காங்கிரசார் மாநகராட்சி மன்றத்தில் எத்தனைப் பண்பாட்டோடு நடந்துகொள்கிறார்கள்? அவர்களைப்போன்ற எதிர்க்கட்சிதான் இந்த நாட்டுக்குத் தேவையா எனக் கேட்டபோது, கைதட்டல்களால் நிலமே நடுங்கிற்று!!

செங்கை மாநாட்டுத் தலைவரை முன்மொழிந்த **விசுவநாதம்** எம். எல். ஏ., மற்ற மாநிலங்களைப் போலல்லாமல், கழகம் எத்தனைத் தூய தன்மையுடன், துடிப்பான எதிர்க்கட்சியாகச் செயல்படுகிறது என்றார். வழிமொழிந்த **முனு ஆதி** எம். எல். ஏ., கழகம் இளைஞர் சமுதாயத்திற்கு எந்த அளவுக்கு வாய்ப்பு நல்குகிறது என்பதனை எடுத்துக்காட்டினார் **அரங்கண்ணல்** எம். எல். ஏ., காங்கிரசாட்சி எத்தனைத் தருக்குமிக்கதாக இருக்கிறதென்று விளக்கினர்.

(4-ம் பக்கம் பார்க்க)

காஞ்சி

மலர் 3 23—10—66 இதழ் 13

# போலி நாடகம்?

"...உற்பத்திப் பண்டங்களின் விலை கடந்த நான்கு மாதகாலத்தில், மிக அதிகமாகத்தான் உயர்ந்துள்ளது" என்று திருவாய் மலர்ந்தருளி இருக்கிறார், தமிழ்நாட்டு முதலமைச்சர் வேலை பார்க்கும் கனம் பக்தவத்சலம் அவர்கள்.

தென் சென்னைப் பகுதியில் நடைபெற்ற ஒரு துவக்க விழாவில் சொற்பெருக்கு ஆற்றிய உரையின் ஒரு துளிதான் மேலே கூறப்பட்டுள்ளவை.

கடந்த நான்கு மாத காலத்தில் என்று அவர் குறிப்பிடுவது, இந்தியப் பொருளாதாரத்தில் புரையோடிப் போய் விட்ட தன்மைக்கு அறுவைச் சிகிச்சை செய்து குணப்படுத்துவதாகக் கூறப்பட்ட நாணய மதிப்புக் குறைப்புக்குப்பின்—கடந்த நான்கு மாத காலத்தை தான் என்பது வெளிப்படை.

அறுவைச் சிகிச்சை செய்து விட்டோம் என்று அறிவிப்பக் கொடுக்கப்பட்ட இருபத்து நான்கு மணி நேரத்துக்குள், சிகிச்சையின் பலனாக, எழும் சிக்கல்கள்—கேடுபாடுகள், தடங்கல்கள் முதலான அனைத்தையும் அலசி, ஆராய்ந்து, சாதக—பாதகங்களைத் தனித்தனியே பகுத்துப் பிரித்து லாப நட்டங்களைக் கூட்டிக் கழித்து, தன் மேதைமையை வெளிக்காட்டும் பொருட்டு அளித்த கருத்துரையில்—

> நாட்டின் இன்றைய நிலைமையையும், பிரச்னைகளையும் பிரத்யட்சமாக ஆராய்ந்து, 'பிரத்யட்ச உணர்வுடன் மத்திய அரசாங்கம் ரூபாய் நாணயத்தின்மதிப்பைக்குறைத்திருத்திருக்கிறது

என்று அறிவித்தார்.

பொருளாதாரத் துறையில் வல்லுநர்களும், அறிவாளர்களும் நாணய மதிப்புக் குறைப்புப் பற்றிப் பலமான கண்டனங்களைத் தெரிவித்ததுடன், உள்நாட்டில், வாழ்க்கைப் பண்டங்களின் விலை உயர்வும், அதனால் ஏழை, நடுத்தர மக்கள் அதிக அளவு சுமை ஏற்றிக்கொள்ளவும் நேரிடும் என்று எச்சரிக்கையும் செய்தார்கள்.

எதையும் எடுத்தெறிந்து பேசி-வழக்காடியே பழக்கப்பட்டுவிட்ட முதலமைச்சருக்கு மட்டும், 'பிரத்யட்ச உணர்வுடன்' எடுக்கப்பட்ட நடவடிக்கை எனப் புரிந்தது போலும்! அதனால்தான் அவர் அப்போது.

> இந்நடவடிக்கையின் மூலம் உள்நாட்டு உற்பத்திப் பெருகும்: ஏற்றுமதி அதிகரிக்கும் விளைச்சல் கூடும்; விலைகள் உயராது.

என்று அறிவித்தாரா? அல்லது 'பிரத்யட்ச நிலை' என்று உணரப்படும் நிலை, கேடுபாடுகளுக்குரியது; விலை உயர்ந்து, நாட்டு மக்களை வாட்டி வதைக்கக் கூடியது என்று உணர்ந்து, உண்மையை ஒப்புக்கொண்டு, ஊருக்குணர்த்தினால், பதவி பறிபோய் விடும்—பதவி தரும் கட்சி பரிதாபத்திற்குரியதாகிப் போகும் என்று அஞ்சி நடுங்கி, உண்மைக்குத் திரையிட்டாரா?

> 'நாணய மதிப்புக் குறைப்புக்குப்பின் பண்டங்களின் விலை மிக அதிகரித்து விட்டது'

—என்று இப்போது கூறக் கேட்ட மக்கள் மேற்கண்டவாறு ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ள மாட்டார்களா?

> நாட்டுமக்கள் அறியாமையில் மூழ்கிக் கிடக்கிறார்கள்.

என்று காங்கிரஸ் நம்பிக்கொண்டிருக்கிறது என்பதனைக் கழகம் முன்கூட்டியே அறிவித்திருப்பதற்கொப்ப,

> விலை உயராது, உற்பத்தி பெருகும்.
> நாட்டுக்குப் பல்வளமும் கிட்டும்.

என்று நான்கு மாதங்களுக்கு முன்னர் வருணிக்கப் பட்டதனை. வருணித்தவரே, இன்று

> விலை உயர்ந்துவிட்டது;
> மக்கள் கஷ்டப்படுகிறார்கள்!

—என்று பேசுகிறார் என்றால், நாட்டு மக்கள் அறியாமையில் கிடக்கிறார்கள்: அவர்களிடம் எதையும் பேசலாம்; எதையும் கேட்டுக்கொள்வார்கள் என்பது தான் பொருளா?

அல்லது, காமராசர் பாஷையில், எதிர்க்கட்சி அணியில் நின்று பேசுவதுபோல பேசி, மக்களை ஏமாற்றி வாக்குகளைக் கவர நினைக்கிறார் என்பது பொருளா?

கனம் பக்தவத்சலம் அவர்களது அமைச்சரவையிலேயே அமைச்சராயிருக்கும் தொழிலமைச்சர் கனம் ஆர். வெங்கட்ராமன்,

> நாணய மதிப்புக் குறைப்பால் ஏற்படும் நன்மைகளைவிட தீமைகள் அதிகமாயிருக்கும்; இதன் எதிரொலி விபரீதமானதாயிருக்கும்

என்றார் அன்று. அவரே அண்மையில்—

> வருகிற ஐந்தாண்டுகளில் பிரமாதமான முன்னேற்றத்தை எதிர்பார்க்க முடியாது

—என்று கூறியிருக்கிறார். பண்டங்கள் உற்பத்தியாளர்களின் சென்னைக் கிளைக்கூட்டத்தில்.

தொழிலமைச்சரின் இந்த வாக்குமூலத்தை வைத்துக்கொண்டும் அனைத்துநாட்டு நாணயச் செலாவணி நிதிக்குழுவின் கருத்து என வெளியிடப் பட்டுள்ள,

> இந்தியா மேலும் நாணயத்தைக் குறைக்க வேண்டியிருக்கும்

என்பதனையும், இணைத்துப்பார்த்தால், எங்களைத் தவிர இந்த நாட்டை ஆள வேறு யாருக்கு யோக்யதை இருக்கிறது என்று கேட்கின்ற காங்கிரசாரின் "நாடகம்" அடுத்த ஐந்தாண்டுகளில் எப்படி இருக்கப் போகிறது என்பதை நல்லறிவு படைத்தவர்களால் உணர்ந்து பார்க்கமுடியும்.

ஆனால், 'விலை உயர்ந்துவிட்டிருக்கிறது' என்று குரலெழுப்பத் தொடங்கி இருக்கும் கனம் முதலமைச்சர் அவர்களது கருத்தோட்டத்தில், தேர்தல்காலத்துப் பேச்சும் செயலும்போல் மக்களை ஏமாற்றி மீண்டும் ஐந்தாண்டுக் காலத்துக்குப் பதவியைப் பாதுகாத்துக் கொள்ளவேதான் இப்படியான நீலிக்கண்ணீர் முறை இருப்பதாகத் தெரிகிறது.

(15-ம் பக்கம் பார்க்க)

### 2-ம் பக்கத் தொடர்ச்சி

வடதிசை மாநாட்டில் கலைஞர் கருணாநிதி பேசுகிறபோது, 'பொர்கோ', 'பெட்போர்டு' — லாரிகளை அரசாங்கம் மட்டும் வாங்குகிறபோது, கழக மாநகராட்சி வாங்கக்கூடாதா? இதற்காக ஒரு ஆர்ப்பாட்டமா? கருப்புக்கொடி கலாட்டாவா? எனக்கேட்டு, ஆட்சியினரின் ஜனநாயகச் சிர்கேட்டைச் சுட்டிக்காட்டியதுபோல, தென் திசை மாநாட்டிலும் இதற்கான விளக்கமளித்துப் பேசினர்.

வடதிசை மாநாட்டில், கே. ஏ. மதியழகன், முதலமைச்சர் பக்தவத்சலத்தின், சட்டமன்ற நுழைவே எத்தனைக் களங்கமுடையது என்பதைச் சுட்டிக்காட்டி, களங்கத்தின் தலையிடத்திலிருக்கும் காங்கிரஸ், எந்தத் துணிவோடு மக்களை அணுகி, வாக்குக்கேட்க வருகிறது என வினவினர். தென் திசை மாநாட்டில், இந்த அரசின் லஞ்ச-லாவண்ய விரிவை விரிவாக விளக்கிச் சிறப்புரையாற்றினர்.

வடக்கு மாநாட்டில், பேராசிரியர் அன்பழகன் பேசுகையில், தரங்கெட்ட தன்மையில் காங்கிரஸ், தன்னுள் யார், யாரை சேர்த்துக்கொண்டிருக்கிறது என்பதற்கும், அது அன்றிலிருந்து இன்றுவரை, எப்படி எப்படி வாக்குறுதிகளைக் காற்றில் பறக்கவிட்டு வந்துள்ளது என்பதற்குமாக அளித்த விளக்கம் நாட்டுமக்கள் அத்துணைப்பேருக்கும் எடுத்துக் காட்டப்படவேண்டியதாகும்.

தூத்துக்குடிமாநாட்டில், சத்தியவாணிமுத்து அவர்கள் பேசுகையில், காங்கிரஸ்கட்சி, கொள்கை முதல் ஊழியர்கள் வரையில் தன்னிடம் இருப்பதனை இழந்து கொண்டிருக்கிறது. நல்ல தொண்டர்களை கூடப் பெற முடியாதிருப்ப தனாலேயே கோடிக் கணக்கில் நிதி திரட்டத் தொடங்கிவிட்டது; ஆனால் கழகம் வளர்ந்தபடி இருக்கிறது—என்பதற்கான சான்று காட்டிப் பேசினர்.

என். வி. நடராசன் பேசும்போது காங்கிரசார் கூறும் நிலவரி விளக்கு வெறும் பித்தலாட்டம் என்றும், தேர்தல் கால வாக்குறுதியென்றும், நில வரி விலக்கு தொடர்பாக கழகம் கூறும் முறைபற்றியும் அரிய விளக்கமளித்தார்.

வட மாநாட்டில், இதுவரை நடைபெற்றுள்ள எட்டு மாநாடுகளில், ஏழு மாநாடுகளுக்குத் தலைமை ஏற்றவர்கள், வழக்கறிஞர்கள் எனவும், காங்கிரசின் தோற்றக் காலத்தில் அதில் வழக்கறிஞர்கள் மிகுதியெனவும், அதே சிறப்புக்குத் தற்போது கழகம் வந்துள்ளதாகவும் விளக்கிக் காட்டினர், வழக்கறிஞர் வில்லாளன்.

வடதிசையான செங்கையில், செழியன் எம். பி. பேசுகையில், மன்னர்களையும், மிட்டா மிராசுகளையும் தன்னோடு சேர்த்துக்கொண்டுவிட்ட காங்கிரசை, காந்தியார் தூய உள்ளத்தோடு வளர்ந்துவந்த அன்றைய காங்கிரசோடு ஒப்பிட்டுப் பார்க்கக்கூடாது என்றும், காந்தியடிகளின் பெயரை சொல்லக்கூட தற்போதைய காங்கிரசுக்கு அருகதை இல்லையெனவும் அரிய விளக்கம் அளித்தார்.

இளம்வழுதி, இந்த மாநாட்டில் பேசும்போது, கொடுமைகளைத் தாங்கிக்கொள்வக்கூட ஒரு எல்லையுண்டு எனவும், அந்த எல்லையையும கடந்து, துன்பங்களை மக்கள் ஏற்றுக்கொண்டுவிட்டார்கள் எனவும், இதற்குக் காரணமாயிருக்கும் ஆட்சியை. அகற்றுதற்கு 1967-ஐ நன்கு பயன்படுத்தித் தீரவேண்டும என்றார்.

ஏ. கோவிந்தசாமி பேசும்போது, நமக்கு நாற்காலிப்பைத்தியம் பிடித்திருக்கிறது என்று கூறுகிற பக்தவத்சலத்தின் நாற்காலிப் பித்து பற்றி விளக்கமளித்தார்.

தோழியர் சற்குணம் பேசும்போது, நாட்டில் நிலவும் பணவீக்கம்பற்றி, கழகம் முன்னதாகவே விடுத்த எச்சரிக்கைபற்றியும், பொருட்படுத்தாத தன்மையால், நாணய மதிப்புக் குறைப்பு ஏற்பட்ட நிலைமையையும் எடுத்து விளக்கினர்.

தேர்தலின்போது, காங்கிரசார், மூலைக்குமூலை சந்திக்கவிருக்கும் சங்கடங்களைக் கருதித்தான் 'நிலவரி நீக்கம்' என்ற கானல்நீரைக் காட்டுகிறார்கள் என்றார் ஏ. பி. ஜனார்த்தனம் எம். ஏ.

செங்கையில் பேசிய சிட்டிபாபு, ஆட்சியின் அலங்கோல நிலைபற்றி விளக்கி கடன்நிலை, வரிப்பளு, தங்கம் நிலை, கரன்சிகள் அச்சிடும் நிலைபற்றிய புள்ளி விவரங்களைக் கொடுத்துவிட்டு, நாம் கொள்கைப் பிரசாரம் புரிந்துகொண்டிருக்கிறோம்; காங்கிரசார் குழிபறித்துக் கொண்டிருக்கிறார்கள்' என்றார்.

ப. உ. சண்முகம் எம். எல் ஏ. பேசுகையில், கழகம் நிலவரி நீக்கம், எந்த தன்மையில் இருக்கவேண்டுமெனக் கூறுகிறது என்பதையும், அதனால் ஏழை விவசாயிகள் பெறும் அனுகூலம்பற்றியும், காங்கிரசார், அடிப்படைத் தீர்வையை ஒட்டு மொத்தமாக நீக்குவதாகச் சொல்லும் அரசியல் மோசடிபற்றியும் விளக்கினர்.

காலஞ்சென்ற தேவராசனரது பேரன், 6-வயது பாஸ்கரன் என்ற சிறுவன்கூட கைதட்டிச் சிரிக்கும் அளவுக்குச் சிரிப்போடு, செவ்விய கருத்துக்களையும், காங்கிரசாரின்

(15-ம் பக்கம் பார்க்க)

## என்ன தெரியுமா?

பென்சில், பேனு விசிறி, காற்றாடி, தொப்பி, கட்டில், தொட்டில், நாடா. கயிறு, விளக்கு, மெழுகுவர்த்தி.

தகரம், அலுமினியம், பித்தளை செம்பு, புல்பிடுங்கி புல்டோசர், மரம் வெட்டி, பிளக், கிளிப், கரண்டி, கிண்ணம், போல்ட் ஸ்க்ரூ,

யூரியா, சல்பேட்.

மயல், சேவல், கோழி, புறு, கிளி, யானை, ஒட்டகம், வாத்து,

கஞ்சிரா, மிருதங்கம், தபேலா மோர்சிங்,

ஊசி, நூல், பலூன், ராந்தல், சீப்பு,

திராட்சை, பேரிச்சமரம், தேங்காய், ஆரஞ்சு, எலுமிச்சை, வாழைமரம், பலாமரம், கத்திரிக்காய், முந்திரி, பாதாம் கொட்டை, பசும் புல்.

தோல்வி, பிரம்மச்சாரி!

அம்பு, கட்டாரி, கோடாரி, வாள்.

துவரை, உளுந்து. பருப்பு, பருத்திக்கொட்டை, பிண்ணாக்கு கொத்துமல்லி, பாயி, தலையணை, தாழ்ப்பாள்!!

இவையெல்லாம் என்ன தெரியுமா?

திகைக்காதீர்கள்!

ஒவ்வொன்றேடும் 'தெரு' என்ற சொல்லைக் கூட்டிப் படியுங்கள்!!

எந்த நாட்டில் என்கிறீர்களா? இந்தியாவில்! தமிழகத்தில்!! வளர்ந்து வரும் ஒரு நகரத்தில்!!!

இந்திய அரசாங்கத்தின் ஆதிக்கத்தில் நிலக்கரி நிறுவனம் ஒன்று நிறுவப்பட்டுள்ள ஊரில்தான்! புரியவில்லையா?

நெய்வேலியில்தான்!!

# தம்பி

# நரி பரியான கதை!

காங்கிரஸ் நண்பரொருவர் சில நாட்களுக்கு முன்பு என்னிடம் பேசிக்கொண்டிருந்தார்; "ஆமாம் அண்ணாத்துரை! என்ன நீங்கள்கூட அமெரிக்காவைத் தாக்க ஆரம்பித்துவிட்டீர்களே?" என்று கேட்டார். நான் சிறிதளவு விவரம் புரியாமலிருக்கக் கண்டு அவரே விளக்கமும் தந்தார்; "அதாவது அமெரிக்காவிடமிருந்து இந்தியா உதவி பெறுவதைக் கண்டிக்கிறீர்களே—கடன் சுமை ஏறுகிறது என்றும்-இந்தியாவின்மீது அமெரிக்காவின் ஆதிக்கம் வளர்ந்துவிட்டது என்றும் பேசுகிறீர்களே? இது என்ன புதிய போக்காக இருக்கிறதே" என்று கேட்டார்.


நீண்ட நேரம் பேசவேண்டுமே என்பதனால், அவருடைய கேள்விபற்றிக் கவலை காட்டவேண்டாம் என்று எண்ணிக்கொண்டு, நான் சுருக்கமாக, "ஆமாம்! அமெரிக்காவின் ஆதிக்கம் வளர்ந்துவிட்டிருப்பதாகத்தான் நான் கருதுகிறேன்; அது தீதானது என்றும் எண்ணுகிறேன்; அதனால்தான் கண்டிக்கிறேன்; ஆனால் இது புதிய போக்கு அல்லவே!" என்று கூறினேன்; விவாதம் வளராது என்ற நினைப்புடன்.

நண்பர் விடவில்லை; இல்லை! இல்லை! இப்போதுதான் இந்தப் போக்கு ஏற்பட்டிருக்கிறது; அதற்குக் காரணமும் எனக்குத் தெரியும்; எல்லாம் "சகவாசதோஷம்" என்றார்.

"அதென்னய்யா சகவாசதோஷம்! பெண்களுக்கு என்னமோ செவ்வாய் தோஷம் என்று ஜோதிடர்கள் கூறுவார்களே, அதுபோல இருக்கிறதே உமது பேச்சு!" என்று நான் கூற, நண்பர், பெண்களிலே சிலருக்கு இருக்கும் செவ்வாய் தோஷத்தைக்கூடப் போக்கிவிடலாம், ஆனால் இந்த சகவாசதோஷம் இருக்கிறதே அது இலேசிலே போகாது" என்று சற்று சூடாகவே கூறிவிட்டு, "சுற்றிவளைத்துப் பேசுவானேன், உங்கள் கழகம் கம்யூனிஸ்டு கட்சியுடன் 'சரசமாட' ஆரம்பித்ததால் ஏற்பட்டதுதான் இந்த 'அமெரிக்க எதிர்ப்பு'—சகவாசதோஷம்தான் காரணம்" என்று கூறிவிட்டு கடுமையான பார்வையை என்மீது செலுத்தினார்.

"ஓஹோ! இப்படி ஒரு கருத்து உலவுகிறதா! நண்பரே! இதை எடுத்துக்காட்டியதற்கு நன்றி. நாங்கள் அமெரிக்காவிடம் இந்தியா அதிக அளவிலே கடனும்-உதவியும்—பெற்றுக்கொள்வது எதிர்கால ஆபத்தாகிவிடக்கூடும் என்ற எண்ணத்தை, இன்று நேற்றல்ல, கம்யூனிஸ்டு கட்சியின் தோழமைத் தொடர்பு ஏற்பட்ட பிறகு அல்ல, துவக்க முதலே கூறிவந்திருக்கிறோம். அமெரிக்காவின் தொடர்பை, கம்யூனிஸ்டு கட்சி எதிர்க்கிறது, நாங்கள் கம்யூனிஸ்டு கட்சியுடன் தோழமை கொண்டிருக்கிறோம், ஆகவேதான் அமெரிக்கத் தொடர்பைக் கண்டிக்கிறோம் என்று வாதாடுவது தவறு" — என்று நான் விளக்கமளித்துவிட்டு அமெரிக்காவின் ஆதிக்கத்தை துவக்கநாளிலேயே நான் கண்டித்து இதழிலே எழுதிய ஒரு கட்டுரையை—கதை வடிவம்—தந்து படிக்கச் சொன்னேன். தம்பி! அதனை உன்னிடமும் தருகிறேன் — நமது போக்கு புதிது அல்ல என்பதனை எடுத்துக்காட்ட.

o



## காட்சி 1.

**இடம்:—கொஞ்சம் கலஞன ஓர் மாளிகை வெளிப்புறம்**
**காலம்:—காலை**
**உறுப்பினர்:—வாயில் காப்போன், ஒரு சீமான்**

மாளிகை கலஞகி இருக்கிறது. சுற்றுச் சுவர், இருபுறமும் பிளக்கப்பட்டுக் கிடக்கிறது. நெடு நாட்களாக, சுண்ணாம்பு அடிக்காததாலும், பழுது பார்க்காததாலும், மாளிகையின் வெளித் தோற்றம், கவர்ச்சி அளிப்பதாக இல்லை, வாயிற்படி, தெருத்திண்ணை, இவைகளின் மீதெல்லாம், புழுதியும், கற்களும் நிரம்பியுள்ளன. ஆனல் மாளிகை, பெரிய அளவுடையது. பழுதுபார்த்து, வர்ண வேலைகள் செய்து முடித்தால், அழகாக விளங்கக் கூடியது என்று தெரியும் நிலை இருக்கிறது.

மாளிகையின் முன்வாயிற்படியில், ஒரு காவலாளி களிப்புடன் நிற்கிருன், கையில் சந்தனக் கிண்ணமும், பன்னீர செம்பும் வைத்துககொணடு. மாவிலைத் தோரணங்கள், வாழைமரம் ஆகியவை கட்டப்பட்டுள்ளன. ஒருபுறம், முட்செடிகள் உள்ளன.

வீதி வழியாக, ஒரு சீமான் செல்கிருர். பருத்த உடல்! மலர்ந்தமுகம்! எதையும் ஊடுருவக் காணக் கூடிய கண்கள்! கெம்பீரநடை! மாளிகையை, அலட்சியமாகப் பார்க்கிருர். ஏதோ கீதம் கேட்கிறது உள்ளேயிருந்து.

**ஜெய! ஜெய! வந்தேமாதரம்**
**ஜெய ஜெய வந்தேமாதரம்!**

என்ற கீதம் கேட்டதும், சீமான், மறுபடி, சற்று உன்னிப்பாக, மாளிகையைப் பார்க்கிருர், பெரிய அளவினதாகவும், விழாக் கோலத்துடனும் மாளிகை இருக்கக்கண்டு, மேலும் உன்னிப்பாகப் பார்த்தபடி நிற்கிருர். சீமானின் பார்வை, மாளிகை மீது விழ்வது கண்ட காவலாளி, முக மலர்ச்சியுடன், வரவேற்கிருன்.

காவ:—நமஸ்தே!

சீமான்:—நமஸ்த்தே........

காவ:—வாருங்கள்!

(வரவேற்றுக்கொண்டே சந்தனம், தருகிருன். அதைத் தொட்டதும் தொடாததுமாக)

சீ:—சந்தனக்கட்டை இங்கு ஏராளமாகக் கிடைக்குமோ?

கா:—நிறையக் கிடைக்கும்

சீ:—இதை இப்படி அறைப்பது தவிர வேறு, என்ன செய்கிறீர்கள்?

கா:—அறைக்கிறோம் — யாராவது பெரியவர்கள் இறந்துவிட்டால், அவர்களை எரிக்க இதை உபயோகிக்கிறோம்—கொஞ்சம் தைலம்—சோப்.........

சீ:—(பயந்து) தைலம், சோப், செய்கிறீர்களா?

கா:——ஆமாம், கொஞ்சம்—அதிகமல்ல,

சீ:—அதிகமில்லையா? சரி, இந்த மாளிகையை ஏன் ரிப்பேர் செய்யக்கூடாது?

கா:— செய்யவேண்டும். செய்யப்போகிருர்கள். உள்ளே போய்ப்பாருங்கள், அங்கே அதைப்பற்றித்தான் பேசுகிருர்கள்.

சீ:—பேசுகிருர்களா? யார்?

கா:—மாளிகைக்குச் சொந்தக்காரர்கள்!

**(சீமான் வேகமாக உள்ளே போகிருர்)**

## காட்சி 2.

**இடம்:—மாளிகை உட்புற மண்டபம்**
**உறுப்பினர்:—மாளிகை வாசிகளின் சிறுகூட்டம்.**

ஒருவர் பேசுகிருர்:—எவ்வளவோ கஷ்டப்பட்டு, மாளிகையை நம் வசப்படுத்தி விட்டோம். நமது மாளிகையோ, மிகப்பெரியது......(ஒரு குரல், முழுவதும் கிடைக்காது போய்விட்டதே, என்று கூவுகிறது.)

பேசுபவர்:—பரவாயில்லை ஒரு சிறு கொலலை! போகட்டும். இந்த மாளிகையை நாம் பெற்ற பெருமையும் சந்தோஷமும்...எவ்வளவு தெரியுமா? இந்தச் சுபதினத்தைப் பாராட்டாதவர்கள் இல்லை.

**(உள்ளே நுழைந்த சீமான்)**

சீ:—உலகமே பாராட்டுகிறது.

பேசு:—நமஸ்தே! உட்காருங்கள்! இவர் போன்ற உத்தமர்களெல்லாம் நமக்கு உற்ற துணையாக இருப்பார்கள்.

**(ஒருகுரல், "யார் இவர்? ஓடிப்போனவனின் ஒன்று விட்ட சகோதரன் போல இருக்கிருன்)**

பேசு:—இனி இம்மாதிரி பேசக்கூடாது. நமது மாளிகையை இனி சண்டை சச்சரவுககுள்ளாக்கக் கூடாது. இவர்,...

சீ:—மனிதன்! சர்வதேசத்தான் — மாளிகையின் மகிழ்ச்சியைக் கண்டு மனமாரப் பாராட்ட வந்தவன். மாசற்ற மனமுடையவன், காசூர் என்பது எமது தேசத்தின் பெயர்.

பேசு:-காசூர் கண்ணியருக்கு எமது வணக்கம்.

சீ:-மாளிகையில் மகிழ்ந்துள்ள உமக்கு எனது மகிழ்ச்சியுரை. எம்மாலான உதவியைச் செய்வேன். காசூரின் நோக்கம், மாசுதுடைத்து, எங்கும் மகிழ்ச்சி வளரச்செய்வதுதான். உங்கள் மாளிகை, பிரம்மாண்டமானது — ஆனல் கவர்ச்சி யில்லை — கவர்ச்சிகரமானதாக்க முடியும் — பழுது பார்க்க வேண்டும் — பல வர்ணம் திட்டவேண்டும் — சுற்றுச் சுவரைக் கட்ட வேண்டும்.......

பே:-ஆமாம், பூந்தோட்டம் அமைக்கவேண்டும்...

சீ:-பழத்தோட்டம் நல்லது.

பே:-பூவிலிருந்துதானே பழம்......?

சீ:-பழம் தராத பூ உண்டு.

பே:-ஆமாம், ஆமாம்—நல்லவிதமாகத் தோட்டம் அமைக்க...

சீ:-தக்க திட்டம் வேண்டும்.

**(ஒருகுரல், பணம் வேண்டுமே, இவ்வளவு பெரிய மாளிகையைத் திருத்த ஏராளமாக வேண்டும்)**

பே:-(ஆர்வததுடன) பயம் வேண்டாம்! நமது மாளிகையிலே, ஏராளமான பணம், புதைத்துவைக்கப் பட்டிருக்கிறது. இடத்தைக் கண்டுபிடித்து, செல்வத்தை எடுத்து, மாளிகையைச் சீரும் சிறப்புமுள்ளதாக்குவோம்!

**(பலர், சபாஷ், பலே! என்று களிப்புடன் கூவுகின்றனர்.)**

சீ:-(கணைத்துக்கொண்டு) முடியும். செய்யலாம். ஆனல்...

பே:-...செய்யமுடியாது என்ற பதமே எம்மிடம் கிடையாது. இந்த மாளிகையைக் கைப்பற்ற முனைந்த போது காட்டிய மாவீரம் மங்கிவிடவில்லை...

சீ:-அந்த ஆர்வத்தையும் நம்பிக்கையையும் நான் பாராட்டுகிறேன. ஆனல், புதைந்துள்ள பொருளைக் கண்டுபிடித்து, பிறகு, மாளிகையைத் திருத்துவது என்ருல் காலம் அதிகமாகும். அதற்குள் கலஞன பகுதி மேலும் கலஞகக்கூடும். காசூர் உதவியைப் பெற்ருல், இப்போதே மாளிகையைப் பழுது பார்க்கலாம்.

**(ஒருகுரல், காசூர் உதவி, வெள்ளையூர் வேலையாக முடிந்தால் என்ன செய்வது?)**

சீ:-பழைய பயத்தை மறந்து, இந்தக்காரியத்தைத் துவக்கவேண்டும்.

**(ஒருகுரல், அது எங்களுக்குத் தெரியும்)**

சீ:-தெரியாமலென்ன! நீங்கள் மாவீரர்கள்! உங்கள் மூதாதையர் ஞானிகள்! இதோ, பேசுகிருரே உங்கள் தலைவர், அவர் அஞ்சாநெஞ்சு படைத்தவர், உங்கள் மாளிகையோ, பிரம்மாண்டமானது. ஆஹா! இதைமட்டும், திட்டமிட்டுக் கட்டிமுடித்தால், காண்போர் களிப்புக்கடலில் மூழ்குவர். காசூர், இப்படிப் பட்டவர்களுக்கு உதவிசெய்வதை, ஓர் கைங்கர்யமாகக் கருதுகிறது. காசூருக்கு, வெள்ளையூரார்போல, பிறர் மாளிகையில் புகுந்துகொண்டு, ஆதிக்கம் செலுத்தும் எண்ணமே கிடையாது......

பே;-அதுதான் சிலாக்கியமான கொள்கை. எந்த ஆட்சியும் சொந்த ஆட்சிக்கு ஈடாகாது.......

சீ:-இதையே எங்கள் தலைவர் எழுபத்தி எட்டு தடவை சொல்லியிருக்கிருர். உங்களுடைய மாளிகையை, உங்கள் மாளிகையிலேயே எங்கெங்கோ புதைக்கப்பட்டுள்ள பொருளைக்கொண்டு, புதிதாக்குவது சிரமம், காலக்கேடு. நீங்கள் விரும்பினுல், காசூர், பணம் தரும், பழுதுபார்த்து, அழகிய வேலைப்பாடுகள் செய்து முடித்து, அதிலே நீங்கள் குதூகலமாக இருப்பதைக் கண்குளிரக் கண்டுகளிக்கும் நோக்கந்தான் காசூருக்கு...

பே:-நேர்மையான நோக்கம். நெஞ்சிலே, வஞ்சமின்றி.

சீ:-வஞ்சகமா! அது பஞ்சையர்களின் குணம், காசூர், நேசர்களின் கொஞ்சுதலைப் பெற, தன்னையே அர்ப்பணிக்குமளவு நல்ல நோக்கம் கொண்டது.

பே:-ஆஹா! மகிழ்ந்தேன்! பூரித்தேன்! இப்படிப் பட்ட உதவி கிடைத்ததற்காக இறைவனை வணங்குகிறேன்.

சீ:-நன்று! நான் சென்றுவருகிறேன். காசூர் சென்று, மாசுமருவற்ற உமது மனத்தை எடுத்துக் கூறி, இந்த மாளிகை பழுதுபார்க்கும் மகத்தான கைங்கரியத்தை, தெய்வ காரியமாக மேற்கொள்ளும்படி வற்புறுத்திக் கூறுவேன்.

பே:-மெத்த சந்தோஷம். ஜெயவிஜயபவ!

சீ:-சந்தேகம் வேண்டாம் எதற்கும், காசூருக்கு, உதவி கோரி, இங்கிருந்து யாரையாவது அனுப்பிவைத்தால்.......

பே:-ஆகா! செய்வோம்! பாபாஜீ!

பாபா:-இதோ, கிளம்புகிறேன்.

(சீமான் விடைபெற்றுக்கொள்கிருர்)

## காட்சி 3

**இடம்:-காசூர்**

**உறுப்பினர்:-கோடீஸ்வரர்**

ஒரு கோடீஸ்வரர், கடிதமொன்றைப் பிரித்துப் படித்துவிட்டு, புன்சிரிப்புடன், அதை மற்றவரிடம் தருகிருர். சுமார் அறுபதுபேர் கூடியிருக்கிருர்கள் அங்கு. ஒவ்வொருவராக கடிதத்தைப் படித்து, மகிழ்கிருர்கள்.

ஒரு கோடீ:-தூதர்...

இன். கோ:-சாமர்த்தியசாலி!

வேறு கோ:-அனுபவசாலி!

ஒரு கோ:-பக்குவமாகக் காரியத்தை முடித்திருக்கிருர்.

வேறு கோ:-பழைய மாளிகையைப் புதிதாக்கும் உதவி செய்வதென்ருல், அவர்களுக்கு உச்சி குளிர்ந்து தானே போகும்.

ஒரு கோ:-நன்ருகக்குளிரட்டும்! பழைய மாளிகையைப் புதிதாக்கப் பணஉதவி செய்யும்போது மாளிகை அடமானமாக வைத்தாகவேண்டுமே! பிறகு, கடனைப் பைசல் செய்து, மீட்டுக்கொள்வதைப் பார்த்துக் கொள்வோம்.

வேறு கோ:-தவறு, உமது திட்டம். பண உதவி செய்யும்போதே அடமானப்பத்திரம் எழுதச்சொல்லக் கூடாது, விழிப்பும், பயமும் பிறந்துவிடும். பணம், ஏறினபிறகு, பத்திரம் தயாரிக்க வேண்டும்.

மற். கோ:-அதுதான் சரியான யோசனை, வரட்டுமே, போன ஆசாமி.

## காட்சி 4

**இடம்:-மாளிகை வாசல்**

**உறுப்பினர்:-பேசினோர், பிணியாள்.**

பிணியாள்:-ஆமாம், என்னமோ, மாளிகையின் ரிப்பேருக்குக் கடன வாங்கப்போவதாக...

பே:-எவன் கலக மூட்டினுன்?

பி:-கலகமா! சேதி சொன்னுன்.

பே:-சேதி, முழு உண்மையல்ல, பணம் வாங்கப் போகிரேும், ரிப்பேர் செலவுக்கு. ஆனுல் அது கடன் அல்ல, உதவித்தொகை.

பி:-உதவித் தொகையா?

பே:-உனக்குச் சூட்சுமம் புரியாது, போ

பி:-புரியத்தான் இல்லை. அன்னியர்கள் ஏதேனும் சாக்குக் கூறிக்கொண்டு உள்ளே நுழைவார்கள் — பிறகு தங்கள் ஆதிக்கத்தைப் புகுத்துவார்கள், என்றெல்லாம், முன்பு...

பே:-சொன்னேன். ஆமாம், அது பழைய கதை. மறந்துவிடு.

பி:-மறக்க முடியவில்லையே! உதவித் தொகை தருவதாகக் காசூரான் சொல்கிருன், இப்போது. பிறகு, மாளிகை அவன்வசம் போய்விடுமோ என்று பயமாக இருக்கிறதே.

பே:-சுத்த பயந்தாங்கொள்ளி! போமய்யா, எனக்கு நேரமில்லை, உன்னிடம் வம்பளக்க.

**மாளிகை — இந்தியா பேசுபவர் — காங்கிரஸ் கட்சி**

**சீமான் — கிரேடி, காசூர் — அமெரிக்கா**

**பிணியாள் — ஏழை**

நாடகத்தின் பொருள் இப்போது விளக்கமாகும் என்று நம்புகிரேும்.

இப்படி மனம்போன போக்கிலே, ஒரு நாடகம் தீட்டுவதா, என்று கோபிக்கத் தோன்றும், அன்பர்களுக்கு.

இந்திய விடுதலை விழாவிலிருந்து, அமெரிக்க நாட்டுத் தூதுவர், ஹென்றி கிரேடி இந்தியாவிடம் காட்டிவரும் 'அக்கறை' அனைவரும் அறிந்த விஷயம்; அதை ஆதாரமாகவைத்து இந்நாடகம் தீட்டப்பட்டது. போதாது என்கிறீர்களா? சரி! இதோ, மேலும் இரண்டு ஆதாரங்கள்.

கிரேடி பேசியிருக்கிருர், சின்ளுட்களுக்கு முன்பு, "வெளிநாடுகளிலிருந்து, மூலதனம் உதவி பெருமலே கூட நீங்கள் நாட்டை அபிவிருத்தி செய்துகொள்ள முடியும் — ஆனுல் மூலதனம் ஏராளமாக ஏற்கனவே உள்ள நாடுகளின் உதவியைப் பெருவிட்டால், உங்கள் நாட்டு அபிவிருத்தி, தாமதப்படும். தக்க நிபந்தனைகளுடனும், சரியான நிலைமையிலும், பலர் பணம் கடன் கொடுக்கத் தயாராக உள்ளனர் என்பதை, என் நாட்டு முதலாளிமார்கள் சார்பாக நான் கூறமுடியும். ஆனுல், இந்த நாட்டிலேயோ, வேறு நாட்டிலேயோ சென்று, எங்களிடம் கடன் வாங்கிக்கொள்ளுங்கள் என்று கெஞ்சமாட்டோம்.

அதற்கு ஒத்து ஊதும் முறையில் சாகல் சந்ஷா, எனும் வடநாட்டு வணிகத் தலைவர்—

"வெளிநாட்டுத் தொழிலரசர்கள், இங்கு பெரிய தொழிற்சாலைகளை எல்லாம் சில வருஷங்களுக்குள் சர்க்கார் ஏற்றுக்கொள்ளும் என்று பயப்படுகிறார்கள், சந்தேகிக்கிறார்கள் — இந்திய சர்க்கார், உடனடியாக இந்த பயத்தையும் சந்தேகத்தையும் போக்கவேண்டும்" என்று பேசினார். நாடகம், தவறு!

O

படித்து முடித்த நண்பர், "அதுசரி! சுவையைக் கூட்டித் தந்திருக்கிறாய்; புரிகிறது; எதிர்பார்க்காததுமல்ல" என்றார்.

"கோபம் குறையாமலே இருக்கிறது, அதனால்தான் விளக்கம் தரும் கட்டுரையைப் படித்த பிறகும் சுமத்திய குற்றச்சாட்டை விடாமல் வைத்துக்கொண்டிருக்கிறீர். போகட்டும், கட்டுரையின் சுவை, கிடக்கட்டும், அந்தச் சுவை இருக்கும் என்று எதிர்பார்த்த தன்மை இருக்கட்டும்; கட்டுரை எப்போது எழுதப்பட்டது என்பதைக் கவனியும்" என்றேன். நண்பர் கவனித்துப் பார்த்துவிட்டு, "அப்போதே எழுதியதா இது?" என்று கேட்டார். "ஆமாம் கட்டுரை, இப்போது, கம்யூனிஸ்டு கட்சியின் தொடர்பு காரணமாக எழுதப்பட்டது அல்ல; தேர்தலுக்காக எழுதப்பட்டதும்அல்ல;மனதிலேபட்டது; அதனால் எழுதப்பட்டது அமெரிக்காவின் பிடி இந்த அளவு அழுத்திக்கொண்டிருப்பதனால் ஏற்பட்ட வேதனையால் எழுதப்பட்டது அல்ல; அமெரிக்காவின் 'பிடி'விழ ஆரம்பித்தபோதே எதிர்காலம் இடர்மிக்கதாகிவிடுமே என்று தோன்றிற்று, அதனால் அவ்விதம் எழுதினேன்; கட்டுரை வெளிவந்தது 21—12—47ல்! இப்போதாவது புரிகிறதா, இது புதிய போக்குமல்ல, கம்யூனிஸ்டு கட்சியின் தோழமையால் ஏற்பட்டதும் அல்ல என்பது?" என்று கேட்டேன். நண்பரின் கோபம் குறைந்தது; இலேசாகக் கவலை அவரைக் கப்பிக்கொண்டது.

தம்பி! அந்த நண்பரை நான் குறிப்பிட்டபோது 'காங்கிரஸ்நண்பர்' என்று கூறியிருக்கிறேன்; கவனித்தனையா? காரணத்தோடுதான் கூறினேன்; அவர் காங்கிரஸ் கட்சிக்காரர் அல்ல: காங்கிரசிலே இடம்பிடித்துக்கொண்டவருமல்ல; விடுதலைப்போர் நடத்திய காங்கிரசிடம் அவருக்கு ஒரு பக்தி–பற்று–பாசம்; அதனால் அவர் காங்கிரஸ்காரராக இருக்கிறார்.

காங்கிரஸ் கட்சியினர் என்பதற்கும் காங்கிரஸ்காரர் என்பதற்கும் வித்தியாசம் இருக்கிறது; ஆறும் நம்பர் வீட்டிலே குடி இருக்கிறேன் என்பதற்கும், என்னுடைய வீட்டு நம்பர் ஆறு என்பதற்கும் வித்தியாசம் இல்லையா? அதுபோல! இவர் காங்கிரஸ் என்ற அமைப்புக்குத்தான் பற்று காட்டுபவர்; காங்கிரஸ் கட்சி என்ற தேர்தல் சூதாட்ட இயந்திரத்துக்கு அல்ல. அதனால்தான் நான் விளக்கம் அளித்ததைக் கேட்டுக்கொள்ள அவருக்கு முடிந்தது. காங்கிரசில் இடம் பிடித்துக்கொண்டவராக இருந்தால், இப்படி என்னிடம் பேசவே சம்மதிக்கமாட்டாரே! என்ன தெரியும் அந்தப் பயலுக்கு என்றல்லவா கொக்கரிக்கத் துடித்திடுவார். இவர், காங்கிரசிலே இடம் பிடித்தவர் அல்ல; இவருடைய மனதிலே காங்கிரஸ் ஒரு இடம் பிடித்துக்கொண்டிருந்தது!

காங்கிரசுக்கும் காங்கிரஸ் கட்சிக்கும், காங்கிரசிடம் பற்றுகொள்வதற்கும் காங்கிரஸ் கட்சிக்காக ஓட்டுவேட்டை ஆடுவதற்கும் இடையே உள்ள வித்தியாசத்தை உணராததன் விளைவாகவே, இந்த என் நண்பர் போன்றார், இன்றும் காங்கிரசிடம் 'பக்தி' காட்டி வருகின்றனர். இந்த 'பக்தியை' காங்கிரசில் இடம் பிடித்துக்கொண்டவர்கள் தமக்குச் சாதகமாக்கிக்கொள்கின்றனர்.

O

ஆளைப் பார்க்காதே! அகிம்சா மூர்த்தியின் படத்தைப்பார்! "ஓட்டு" அவருக்கு! அதைத் தெரிந்துகொள்.

என்ன செய்வார்? என்ன சாதிப்பதற்காக இவர் போகிறார்? இவருடைய திட்டம் என்ன? திறமை எப்படிப்பட்டது? என்றெல்லாம் கேட்காதே! இவர், காங்கிரஸ் கட்சி–அவ்வளவுதான் நீ தெரிந்துகொள்ள வேண்டியது—மற்றவை பற்றி எண்ணி மனதைக் குழப்பிக்கொள்ளாதே'!

இவருக்குப் போடும் "ஓட்டு" இவருக்காக அல்ல —காங்கிரசுக்காக! — இவர், முன்பு "ஒருமாதிரி" ஆளாக இருந்தாரே — வட்டித்தொழிலால் கொழுத்தவராச்சே—அதிகாரிகளிடம் குயிலாகி, ஏழைகளிடம் குக்கலாகி, விடும் குணவானாயிற்றே!—என்றெல்லாம் யோசிக்காதே! இவர் இப்போது காங்கிரஸ் கட்சி—சாக்கடைத் தண்ணீரானாலும், கங்கையில் கலந்துவிட்டால், 'பரிசுத்தமான புண்ணிய தீர்த்தம்' மறவாதே!

நெடுங்காலமாகக் காங்கிரசில் ஈடுபட்டு, நாட்டுக்கு உழைத்த பலருடைய கோரிக்கைகளைக் குப்பைத் தொட்டிக்குள் போட்டுவிட்டு. இவருடைய பணபலத்தின் மீது ஏற்பட்ட பாசத்துக்குக் கட்டுப்பட்டு, காங்கிரஸ் கமிட்டி இவரைத் தேர்தலில் அபேட்சகராக நிறுத்திவைக்கிறதே, இது அனியாயமல்லவா, என்று பேசாதே! காங்கிரஸ் முத்திரையை இவர் 'தேசசேவை' டைரியைக் காட்டி அல்ல, தமது 'செக்புத்தகத்தை'க் காட்டிப் பெற்றாராமே, என்று பேசாதே!

எப்படிப்பட்டவரானால் உனக்கென்ன! என்னென்ன செய்து காங்கிரஸ் முத்திரையைப் பெற்றிருந்தால்தான் உனக்கென்ன! ஏன் அவைகளைப்பற்றி யோசிக்கிறாய்! அவருக்கு எப்போது காங்கிரஸ் முத்திரை விழுந்துவிட்டதோ. அப்போதே அவர், 'உங்கள் ஓட்டுக்களை'ப் பெறும், யோக்யதையைப் பெற்றுவிட்டார், என்பது பொருள்! இதிலே வாதத்துக்கு இடமில்லை!

தேர்தல் காலத்திலே, இதுபோலப் பேசிதான், 'வெற்றி' பெற்றனர். தேர்தலில் வெற்றி பெறுவதன் மூலம், அந்தத் திருவாளர் என்ன நன்மையைச் செய்யப்போகிறார், அவருக்குள்ள ஆசாபாசங்கள், யாவை, திறமை அனுபவம் என்ன, என்பது பற்றிய நினைப்பே மக்கள் மனதிலே இருக்கமுடியாதபடியான, பிரசாரம் நடைபெற்றது. இது ஒரு கட்சியின் மகத்தான வெற்றிக்கு உதவிற்று—ஆனால் அதே வெற்றி, பொதுமக்களின் நலனைக்கோரி அமைக்கப்பட்ட மக்களாட்சி முறைக்கு ஊறுசெய்தது. காங்கிரஸ் கட்சி வெற்றி மாலை அணிந்து—மக்களாட்சி முறைக்கு அதுவே மரண ஓலையாகவுமாகிவிட்டது.

★

சில 'தொகுதிகளில்,' காங்கிரஸ் சார்பில் நிறுத்தப்பட்ட அபேட்சகர்களின் 'அறிவுச் சூன்யத்தைப் பற்றி, மக்கள் வேடிக்கையாகப் பேசிக்கொண்டே, "ஓட்டு" அளித்தனர்—காரணம், அவர்கள், தாங்கள் தரும் 'ஓட்டு' அந்த ஆசாமிக்கு அல்ல, காங்கிரஸ் கட்சிக்கு—என்று நம்பினர் — நம்பும்படிச் செய்யப்பட்டனர்.

★

'இது வெறும் "கைகாட்டி" தானேப்பா!'

“கல்லுப்பிள்ளையார் போல இருக்கும்—வாயைத் திறக்காது”

“திறவாமலிருந்தால் நல்லது! திறந்தால் தெரிந்துவிடும், இது ‘வறம், பாண்டம் என்பது”

“ஆமாம், ஆமாம்! புகையிலை விரித்தால் போச்சு! புண்ணியவான் பேசினுல் போச்சு!

“உப்புச்சத்தியாக்கிரகத்தின்போது இந்த ஆசாமி காங்கிரஸைக் கண்டபடி திட்டிக்கொண்டு இருந்தாரே......”

“இப்போது எப்படிக் காங்கிரசில் சேர்ந்தார் என்று கேட்கிருயா? இது தெரியவில்லையா உனக்கு! காங்கிரசில் சேர்ந்தால்தான், சட்டசபைக்குப் போக முடியும் என்பதனுல்தான்.”

“அதுசரி—இப்படிப்பட்ட ஆளை, ஏன் காங்கிரஸ் கட்சி சேர்த்துக் கொண்டது.”

“ஊரிலே பெரிய ஆள்—பணக்காரன் என்பதனுலேதான்”

“பாவம்! பண்டரி, படாதபாடு பட்டுவந்தான் காங்கிரசுக்கு—அவனை நிற்க வைத்திருக்கலாம்”

“ஆமாம்! அவன்கூடக் கேட்டானும்—கெஞ்சினுனும்!”

“கடைசியில், ‘எதற்கும் உதவாததை’ப் பிடித்து நிற்கவைத்து விட்டார்கள்.”

“இது போய் அங்கே என்ன செய்யும்!”

“செய்வதாவது, மண்ணுவது! தூக்கு கையை, என்ருல் தூக்கும்! மற்ற நேரத்தில் தூங்கி விழும்!”

★

பல தொகுதிகளில், பொதுமக்கள் இதுபோலப் பேசிக்கொண்டனர் - அபேட்சகர்களின் ‘யோக்யதாம்சங்களை’ப் பற்றி ‘ஓட்’ மட்டும் போட்டனர்—ஆளுக்காக அல்ல, கட்சிக்காக. இது கட்சிக்குள்ள சக்தியை, பிரசாரத்துக்குள்ள பலத்தை விளக்கிற்று — ஆனுல் அதேபோது மக்களாட்சி முறையின் மாண்பையும் மாய்த்துவிட்டது. குன்றின்மீது மூலிகையும் உண்டு, முள்ளும் உண்டு! ஆனுல் குறைமதியாளர் தவிர மற்றையோர், குன்றின்மீது உள்ளதெல்லாம் மூலிகை என்று கொள்ளார்—மூலிகை இது, முள் அது என்று பிரித்து எடுத்துப் பயன்படுத்துவர்! ஆனுல் ‘குன்றுக்கு’ ஒரு ‘மகிமை’ கற்பித்து, அதன்மீது இருக்கும் ‘எதை’ எடுத்து உபயோகித்தாலும் ‘புண்யம்’ என்று கூறிவிட்டால், பெரும்பாலான மக்கள், மூலிகையா முள்ளா என்று ஆராயமாட்டார்கள், கிடைத்ததைக்கொண்டு களிப்படைபவர். அதுபோல் ஆயிற்று, தேர்தல்! யாரும் ‘வரமுடிந்தது’ மூலாம் பூசிக்கொண்டதும்!

★

மக்கள் அளித்த ‘ஓட்டு’ தமக்கு அல்ல, தம்மைத் தழுவி உள்ள கட்சிக்கு—என்பது, அபேட்சகர்களுக்கும், ஒரு அசட்டுத் தைரியத்தைக் கொடுத்தது—யாரும் தம்மை ஏதும் கேட்க முடியாது, என்ற தைரியத்தை! அவர்களில் பலர், வெளிப்படையாகவே “எனக்கா ‘ஓட்டு’ தந்தனர்—என்ன செய்தாய், ஏது செய்தாய், என்று என்னைக் கேட்க! காங்கிரஸ் கட்சிக்குத் தந்தனர்!!” என்று பேசிக்கொண்டனர்.

தேர்தல் முடியும் வரையில் இந்தக்கருத்தை அடக்கத்துக்குப் பயன்படுத்தினர். பிறகு, ஆர்ப்பரிப்புக்குப் பயன்படுத்தினர். “நான் சாமான்யன்-எனக்காக ஓட்டுக் கேட்கவில்லை-மகத்தான காங்கிரஸ் கட்சிக்காகக் கேட்கிறேன்” என்று அடக்கமாகப் பேசி ‘ஓட்டு’ பெற்றனர்—பிறகு, “என்னய்யா இது, ஓயாமல் வந்து, என்பிராணனை வாங்குகிருய்! ஓட்டு போட்டேன் ஓட்டு போட்டேன் என்று சொல்லிச் சொல்லி, பாத்யதை கொண்டாடுகிருய்! இதோ பார்! நீ, ஒன்றும் எனக்குப் போடவில்லை ஓட்டு! தெரிகிறதா? காங்கிரஸ் கட்சிக்குப் போட்டாய். ஆமாம்! போய், உன் குறைகளைக் கட்சியிலே, சொல்லிக்கொள்—போக்கும்படி சொல்லு—இங்கே வந்து என் உயிரை வாங்காதே, போ” என்று கடுகடுப்புடனும் பேசலாயினர். மக்களாட்சி கேலிக்கூத்தாக்கப்பட்டது. பெரும்பாலான தொகுதிகளில், பொதுமக்களுக்கு, ‘ஓட்டு’ பெற்றுக்கொண்டு போய், வெல்வெட்டு மெத்தைமீது உட்கார்ந்துகொண்டிருக்கும் ‘உயர்ந்தவர்களின்’ உருவம்கூடச் சரியாகத் தெரியாது! இப்படி பெட்டிக்குள் புகுந்துகொண்டு சட்டசபை சென்ற ‘பெருமான்களின்’ ஆட்சியிலேதான் நாடு இருக்கிறது.

★

கழைக்கூத்தாடி, நாம் நமது கழுத்து வலியெடுக்கும் விதமாகப் பார்க்கவேண்டிய அளவு உயரமுள்ள கம்பின்மீது ஏறிக்கொண்டு, ஆடிக்காட்டுகிருன் — கயிற்றின்மீது ஓடிக்காட்டுகிருன் — கத்தி கொண்டு வயிற்றில் குத்திக்காட்டுகிருன். அதைக் காணும் நாம், கைகொட்டுகிறேம்—சபாஷ் கூறுகிறேம்—ஆச்சரியமடைகிறேம்—அவன் திறமையை மெச்சுகிறேம்; அதுகேட்டு அவன், “என் திறமையைக் கண்டீர்களல்லவா! இப்படிப்பட்ட என்னை ஏன் நீங்கள் உங்கள் ஊர்த்தலைவனுகக் கொள்ளக்கூடாது!” என்று கேட்கமாட்டான்—கேட்கத் துணிந்தால் கம்பின்மீது ஏறி வித்தைபல செய்தவன், தரையின்மீது நிற்கவும் முடியாதபடி, புத்திகற்பிக்கும் வித்தையில் மக்கள் ஈடுபடுவர்! வைத்தியத்தில் நிபுணர் ஒருவர்—ஆனுல் அதற்காக அவரிடம் நோயாளியைக் கொண்டு போய்க் காட்டுவார்களே யொழிய, இடிந்த பாலத்தைக்காட்டி, இதை எப்படிப் புதுப்பிப்பது என்று கேட்கமாட்டார்கள்! நாலிலுள்ள சிக்குகளைச் சுலபத்திலே நீக்கும் நிபுணர் இவர், இப்படிப்பட்டவருக்கு, எதுதான் சாத்யமாகாது, எல்லாம் செய்யவல்லவர், என்று எண்ணமாட்டார்கள். போருக்குப் பயன்படும் ‘வீரன்’ சோறு செய்யப் பயன்படாத தீரவான், ஏனெனில் அவன் அவ்வளவு தீரமாகப் போராடியவன் என்று கருதமாட்டார்கள்—ஏமாளிகள் தவிர. ஒரு துறைக்குத் தேவையான பண்பும் பயிற்சியும் பெற்று நிபுணராகி விடுபவரைக்கொண்டு, எல்லாத் துறைகளிலும் பணிபுரியவைத்துப் பயன் காணலாம் என்று எண்ணுவது பேதைமை ஆலும்வேலும் பிளக்க உபயோகமாகும் கோடரி, வாழைக்குப் பயன்படுவதில்லை! பாறையைப் பிளக்கும் உளிகொண்டு, பச்சைக் காய்கறியை நறுக்கமாட்டார்கள்! ஒவ்வோர் துறைக்கும், ஒவ்வோர் செயலுக்கும் ஏற்ற, தேவையான கருவியும் வேறுவேறு! ஒன்று, மற்றெல்லாவற்றுக்கும் பயன்படும் என்று எண்ணுவது ஏமாளித்தனம். ஏகாதிபத்யத்தை எதிர்த்துப் போர்புரியும் பயிற்சியும் பக்குவமும்பெற்ற ஒருகட்சி, நாட்டை ஆளவும் பயன்பட்டே தீரும் — போரில் பெற்ற வெற்றிபோலவே, ஊராள்வதிலும் வெற்றி கிடைக்கும் என்று எண்ணுவது, ‘தேசியமாக’ கருதப்பட்டது! அதனுலேதான், ‘யாரும் வரமுடிந்தது — ஏதும் செய்யாதிருக்கும் போக்கு வளர்ந்தது — மக்களாட்சி முறை கேலிக்கூத்தாயிற்று.

★

பெரும்போர் முடிந்ததும் படை கலைக்கப்படுகிறது —சமையல் காரியம் முடிந்ததும், நம் வீட்டு அடுப்பு நெருப்பைக்கூடத்தானே அணைத்து விடுகிறேம்! அதுபோலவே, ஏகாதிபத்ய எதிர்ப்புக்காகவெனத் திரட்

டப்பட்ட 'படை'யை அந்தக் காரியத்துக்கு மட்டும் பயன்படுத்திக்கொண்டு, பிறகு கலைத்து விட்டிருக்க வேண்டும்—ஆனால், நடந்தது வேறு—விபரீதமானது-அந்தப் படை கலைக்கப்படவில்லை என்பது மட்டுமல்ல மக்களின் வாழ்வு, அந்தப்படையிடம் ஒப்படைக்கப்பட்டது என்பது மட்டுமல்ல, அந்தப் படைக்கு என ஏற்பட்ட சின்னத்தைப் பொறித்துக் கொண்டு கிளம்பிய கழுகுகளை எல்லாம் கிளிகளெனக் கருதிக் கொண்டனர் மக்கள்—நயவஞ்சகர்கள் பலர், அந்தச் சின்னத்தைப் பொறித்துக்கொண்டு, நாடாளும் வாய்ப்பைப் பெற்றனர்! கிளிக்கென இருந்த பொந்துக்குள் கருநாகம் குடிபுகுந்த கதை போலாயிற்று! நல்லாட்சி முறை பற்றிய அக்கறை அடியோடு அழியலாயிற்று. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள், கதர் உள்ள போதே தேடிக்கொள் என்று இலாப வேட்டை ஆடக் கிளம்பிவிட்டனர்.

வாய்ப்பைப் பெற்ற இதிலே, யானையிடம் மாலையைக்கொடுத்து, அது யார் கழுத்தில் மாலையைப் போடுகிறதோ அவரை அரசனாகக்கொண்டு அந்த அரசனை ஆண்டவனுக்கு அடுத்தபடி என்று நம்பி அடக்க ஒடுக்கமாக நடந்துகொள்ளவேண்டும் என்ற விதமான அரசியல் தத்துவத்தில் நம்பிக்கை கொண்டவர்களும் உள்ளனர், அமெரிக்க நாட்டு அரசியல் முறையைத் திருத்தி ஆஸ்திரேலிய நாட்டு ஆட்சி முறையில் ஒரு பகுதியைப் புகுத்தி, சோவியத் முறையைச் சிறிதளவு கலந்து, பிரிட்டிஷ் பிடிவாதத்தையும் பிரன்ச்சு பசப்பையும் சம எடையாகக் கலந்து புகுத்தி, அதே போது "இந்தியப்பண்பாட்டை" இழந்துவிடாதபடியும் பார்த்துக் கொள்ளும் விதமான அரசியல் தத்துவத்தை நாடுபவர்களும் இருக்கிறார்கள். ஊராட்சி அமைப்புகள் ஒழிய வேண்டும் என்று கூறுபவர்களும் இருக்கிறார்கள். ஒழியக்கூடாது மேலும் அதிகமான அதிகாரம் அளித்து அமைக்கவேண்டும் என்பவர்களும் இருக்கிறார்கள் அரிசியைத் தீட்டிச் சாப்பிட வேண்டும் என்பார் உண்டு! தீட்டுவது தீது என்பாரும் உண்டு, ஆலைகள் வேண்டாம் என்பார் உளர்! விவாகவிடுதலை என்ற பேச்சே நாசகாலத்தால் ஏற்படும் விபரீதபுத்தியின் விளைவு என்று பேசுவர் உண்டு! தசரதனைக் காட்டி, 'ஏகதாரம்' என்ற கட்டுப்பாடு கூடாது என்று வாதிடும் பேர்வழிகள் உண்டு, அவர் மகன் ராமன் மீது ஆணையிட்டு 'ஏகதாரம்' எனும் முறைதான் சட்டமாக வேண்டும் என்று கூறுவோர் உண்டு! ஜான்சிராணியை சாட்சிக்கு அழைக்கும் வீரர்களும், சாவித்திரியைச் சாட்சிக்கு அழைக்கும் பக்தர்களும் புதுமை விரும்பிகளும் பழமைக்கொள்கையினரும், சகல வகையினரும் கொண்டதாகிவிட்டது, காங்கிரஸ் கட்சி. ஆகவே, அதன் ஆட்சிக்கு உட்பட்ட நாடு, என்ன உருவம் பெறும், என்று எவ்வளவு பெரிய நிபுணராலும் கணிக்கமுடியாத நிலை ஏற்பட்டது. அவர்கள் எல்லோருமே, கதருடையினர், காங்கிரஸ்கட்சியினர். எனவே ஒவ்வொருவரும் தமது நினைப்பே சரி, என்று கருதுகிறார்—அந்த நினைப்பின்படி நாடு ஆளப்பட்டால் தான் நன்மை கிடைக்கும் என்று எண்ணுகிறார். அந்த முறைதான் காங்கிரசின் உண்மையான திட்டம் என்று கருதுகிறார். இது, மக்களை மருளச்செய்யும் முறை—வாழவைக்கும் முறையல்ல! என்பதுபோல, எல்லோரும் ஒரே கட்சியின் பெயரைக் கூறிக் கொண்டு சென்றவர்களே தவிர, அவர்களில், பலவகையினர் உண்டு—அவரவர்களின் திறமைக்கு ஏற்றபடி பலனையும் தேடிக்கொள்கிறார்கள்.

கலெக்டரையும் கன்ட்ரோல் ஆபீசரையும், மிரட்ட, கதர் பயன்படுகிறது, போதாதா இது என்று எண்ணிப் பூரிக்கும் 'புண்யவான்கள்' மிகுந்துவிட்டனர். மந்திரிகளை மடியில் வைத்திருக்கிறேன்...கவர்னரைக் கைக்குள் வைத்திருக்கிறேன்—பக்தவத்சலம், என்னைப்பார்க்காவிட்டால் தூங்கமாட்டார் அவ்வளவு பிரியம் என்னிடம், என்று அதுபோன்ற பலவகைப் பேச்சுப் பேசி, மிரட்ட, மயக்க, பயிற்சி பெறும் அளவுக்கு, பிரச்னைகளை விவாதிக்க திட்டங்களைத் தீட்ட, மசோதாக்கள் தயாரிக்க, பயிற்சி பெற்றனரா, என்று யோசித்தால் நேர்மையுள்ள எந்தக் காங்கிரஸ்காரரும் வெட்கமும் துக்கமுமடைய வேண்டியதுதான். பண்பற்றவர், பயிற்சியற்றவர்; பொறுப்பை மறந்தோர், பொதுமக்களைக் காணாதார், அக்கறையற்றவர், ஆள் விழுங்கி, இச்சகம் பேசுவோர், உருமாறிகள், என்று இவ்விதமாக ஒரு பட்டியலே தயாரிக்கலாம், ஆளவந்தோம் என்று கூறிக்கொண்டவர்களை. இது மக்களாட்சி முறையல்ல—கட்சிப் பற்று காரணமாக இந்த நிலையை வளரவிடுகிறார்கள்.

O

காங்கிரஸ் கட்சி எவ்விதமான முறையிலே மாறிவிட்டது என்பதையும், எத்தகைய போக்கினர்களெல்லாம் அதிலே இருந்து வருகின்றனர் என்பதையும், எப்படிப்பட்ட சுயநலக்காரரெல்லாம், இடம் பிடித்துக்கொண்டு, இலாபவேட்டை ஆடுகின்றனர் என்பதையும் உணர்ந்து, மனம் வெதும்பி, காங்கிரசை விட்டு வெளியேறிவிட்டவர் பலர்; என் நண்பரும் அதுபோல ஆகவேண்டியவர்; அவர் மட்டுமா! வேறு பலரும் உளர்.

ஆகவேதான் தம்பி! அவர்கள் நம்மிடம் கோபம் கொண்டாலும் வெறுப்பைக் காட்டினாலும், நாம் பொறுமையை இழந்திடாமல், நமது பொறுப்பு பெரிது என்பதனை உணர்ந்து அவர்களின் மனதிலேயும் நமது கருத்துகள் பதிந்திட வேண்டும் என்ற நோக்கத்துடனும் அதற்குத் தேவைப்படும் பக்குவத்துடனும் நடந்துகொள்ளவேண்டும் என்பதனை நான் வலியுறுத்தியபடி இருக்கிறேன்.

கேட்டால் கேள்; விட்டால் விடு!

என்ற போக்கிலே நம்முடைய பேச்சு இருந்திடவே கூடாது. நாம் கூறுவதை அவர்கள் ஏற்றுக்கொள்ளாமலிருப்பதைக் காணும்போது

நமது பிரசார முறை மேலும் நேர்த்தியானதாக வேண்டும்

என்ற எண்ணம் தோன்ற வேண்டுமே தவிர, எரிச்சல் எழக்கூடாது.

எடுப்பிடி ஆகியாகிலும் இனிப்புப் பெற்றிட வேண்டும் என்ற நோக்குடன் ஒட்டிக்கொண்டவைகளை அல்ல நான் குறிப்பிடுவது; ஒரு காலத்தில் காங்கிரஸ் நாட்டு விடுதலைக்காகப் போராடிய அமைப்பாயிற்றே என்பதனை எண்ணி எண்ணி நெஞ்சு நெகிழ்ந்திடும் நல்லோர்பற்றிக் குறிப்பிடுகிறேன்.

**வேடிக்கை என்பதா வேதனை தருவது என்பதா பாரேன், தம்பி! 1947ல் சுயராஜ்யம் கிடைத்ததே அதனை 'துக்கதினம்' என்று அறிவித்த பெரியார் இன்று காங்கிரஸ் கட்சிக்கு மிகவும் வேண்டியவர்! ஆகஸ்ட்டு 15, துக்கதினம் அல்ல; விடுதலை நாள்! விழாநாள்! என்று, (எதிலும் பெரியாரிடமிருந்து**

> **மாறுபடாமலிருந்து வந்த) தெரிவித்து அவருடைய கோபத்துக்கு ஆளான நான் காங்கிரசாரால் கடுமையாகக் கண்டிக்கப்படும் நிலையிலே இருந்து வருகிறேன்.**

விடுதலைப்போர் நடாத்திய காங்கிரசிடம் எனக்கும் உனக்கும் தம்பி! மதிப்பு இருக்கிறது; இருப்பதுதான் முறை! ஆனால் விடுதலைப்போர நடாத்திய காங்கிரசிலே—போர் முடிந்து அறுவடை ஆரம்பமான பிறகு இடம் பிடித்துக்கொண்டுள்ளவர்கள் செய்திடும செயலை எப்படி நம் போற்றமுடியும், பாராட்ட முடியும்?

> **காங்கிரஸ் விடுதலைப்போர் நடாத்தி நாட்டுக்கு சுயராஜ்யம் வாங்கிக் கொடுத்தற்காக மதித்திட போற்றிட, மனமற்றவர்கள் காங்கிரஸ் ஆட்சியை நடத்த ஆரம்பித்தபிறகு மதித்திட, போற்றிட முன்வந்திடின், என்ன பொருள்? உள்ளன்பு என்று அதனைக் கூறமுடியும். ஆசையோ அச்சமோ அதற்குக் காரணமாக இருக்கமுடியுமே தவிர பாசம்—பற்று—என்று கூறமுடியும். பேதையும் கூறிடானே!**

காங்கிரசில் இடம் பிடித்துக்கொண்டவர்களின் இயல்புக்குத் தக்கபடி, அந்தக் கட்சியும் அதனால் நடத்தப்படும ஆட்சியும இன்று இயல்புகளைப் பெற்றுக் கொண்டுவிட்டது.

> அந்த இயல்புகளைத்தான் நாம் வெறுக்கிறோம் கண்டிக்கிறோம்.

தம்பி! சாக்கரைப் பொங்கலிலே முந்திரிப்பருப்பு போடுவது முறை, தேவை; ஆனால் சர்ககரைப் பொங்கலிலே இலுப்பககொட்டைகளைப் போட்டிடின, எவர் விரும்புவர்? என்ன ஆகும் அந்த இனிப்புப் பண்டம்? முக்கனிச் சாற்றினிலே ஒருபிடி தெருப் புழுதியைக் கலந்திடின், பருகிட எவா இசைவர்?

இன்றையக்காங்கிரசின் இந்த நிலையினை உணர்ந்ததால்தான், பலர், அந்தக் கட்சியைவிட்டு வெளியே சென்றுவிட்டனர்; பலர் இருக்கின்றனர் ஒப்புக்கு; கட்சியில் இடம் பிடித்துக்கொண்டவர்கள் செய்திடும் பாதகங்களுக்கு உடைந்தையாக இருந்து தீரவேண்டி நேரிட்டுவிட்டதே என்ற வேதனையைச் சுமந்து கொண்டு.

இன்றைபக் காங்கிரஸ், எவருக்குப் பயன்பட்டு வருகிறது என்பதைக் கண்டதாலேதான, பொதுமக்கள் இன்று கழகத்தை ஆதரிக்கின்றனர்.

இன்றையக் காங்கிரசிடம் சுவைமிக்க பலன் எதிர்பார்த்து இளித்துக்கிடப்போரே அதிகம் உளர், பற்றுவைத்துள்ளவா அதிகம் இல்லை என்பதை உணர்ந்ததால்தான், மக்களுக்கு மனமயக்கம் தரத்தக்கது எதையாகிலும் சொல்லித் தீரவேண்டிய நிலைமைக்குக் காங்கிரஸ் 'சூத்திரதாரிகள்' வந்துள்ளனர்.

அத்தகைய மனமயக்கத்தை ஊட்டவே, 'சோஷியலிசம்' பேசுகின்றனர்.

O

நெற்றியிலேதிருநீறு! கழுத்திலேஉருத்திராட்சமாலை! கட்கத்தில், எதையோ பட்டுத் துணியால் போர்த்து வைத்திருக்கிறார்! சிவக்கோலத்துடன் விளங்கும் அவரை மன்னர் அன்புடனும், பக்தியுடனும் வரவேற்கிறார். கட்கத்தில், ஏதோ சிவாகம ஏடு இருக்கிறது; அடியார், நமக்கு அதனைக்காட்டி, நாதனின் நற்பாதத்துக்கு வழிகாட்டப்போகிறார். நமக்கு இதுஓர் நன்னாள்! நல்லாசான், நம்மைத்தேடி வந்துள்ளார், என்று எண்ணிய மன்னன், வருக! வருக! சிவக்கோலப் பெரியீரே வருக! என்னை வாழ்விக்க வந்துள்ள பெம்மானே வருக என்றுகூறி வரவேற்கிறார்-வந்தவர் குறுநகை புரிகிறார்-வணங்கியவர், அது அவருடைய அருள்நெறியின் விளக்கம் என்று எண்ணுகிறார்; வந்தவர், கட்கத்திலிருந்த மூட்டையை அவிழ்க்கிறார் - கூரிய வாள், மின்னுகிறது-மன்னனின் மார்பில் பாய்கிறது-அவர் சாய்கிறார்-சதிகாரன் களிக்கிறான்-வேடம் பலித்தது-வெற்றி கிடைத்தது, வீரவேந்தனைக் களத்திலே வீழ்த்துவது முடியாதகாரியமாக இருந்தது - இதோ முடித்துவிட்டேன் காரியத்தை, மன்னனின் கருத்தை மயக்க ஒருசிறு கபட நாடகமாடிக் காரியத்தைச் சாதித்துவிட்டேன் என்று களிக்கிறான்.

இரு மன்னர்கள், போரிட்டனர் - அதிலொருவன் போரில் புலி-மற்றவன் குணத்தால் நரி. புலிஎனப் போரிடும் மன்னன், சிவனடியார்களைக் கண்டால் போதும், அவர்கள் சென்னியைச் சிரமீதுகொள்ளவும் தயங்காக் குணமுடையவன், இதுதெரிந்த முத்தநாதன் என்ற நரிக்குணத்தான், நன்றாகக் குழைத்து நீறு பூசிக்கொண்டான், உருத்திராட்சத் தாவடங்கள் அணிந்துகொண்டான், கூரிய கட்கத்தைப் பட்டுத் துண்டுகொண்டு மறைத்தெடுத்துக்கொண்டான், வீரவேந்தனைத் தனியாகக்கண்டு உலபேச அனுமதி கோரினான்; வேடத்தைக் கண்ட வேந்தன் ஏமாந்தான்-மெய்ப்பொருள் உணர்த்த வந்தேன் என்றான் வேடதாரி-தன்யனானேன் என்றான் சூதறியா மன்னன்-உயிரை இழந்தான்.

மெய்ப்பொருள் நாயனார் கதை, என்று கூறுவர், இதனைப் பெரிய புராணத்தில் - வேடத்தைக் கண்டு ஏமாறலாகாது என்றஅறிவுரைக்குப்பயன்படுத்துவதுமில்லை. இதனை-சிவபக்தியின் மேன்மைக்கு ஒரு எடுத்துக்காட்டாகவே, பயன்படுத்துகின்றனர். கதைகளைப் பக்தர்கள், எங்ஙனம் பயன்படுத்துகிறார்கள்என்பதைக் கூற அல்ல, இதனை நாம் இங்கு தீட்டுவது. சைவத்தின் மீது அளவுகடந்த பற்றுக்கொண்டவரை 'சிவவேடம்' பூண்டு ஏய்த்து, மாய்த்த, அந்தப் பெரியபுராணத்தின் மறுபதிப்பென, இப்போது நமது நாட்களிலே, அரசியல் துறையிலே நடைபெறும், உரிமைப் படுகொலைகளைப் பற்றிக் குறிப்பிடவே இதனைக் கூறினோம்.

நெற்றியிலே நீறு, எனவே நேர்மையிலே நாட்டமிருக்கவேண்டும்-கழுத்திலே சிவச்சின்னம், ஆகவே அதை அணிந்திருப்பவரின் உள்ளம் தூய்மையானதாக இருந்தே தீரவேண்டும் - கட்கத்திலே ஏதோ இருக்கிறது, சிவக்கோலத்தவரிடம், சிவாகம ஏடுதான் இருக்கும்-என்ற முடிவுக்கு, பக்தியின் காரணமாக வந்து உயிரை இழந்த மன்னன்போல, வேடத்தைக்கண்டு ஏமாந்து, உரிமையை இழந்துவிடும், பரிதாபத்துக்குரிய மக்கள் அரசியல் துறையிலே அநேகர் உள்ளனர்.

மெய்ப்பொருள் உரைக்க வந்துள்ளார், என்று எண்ணி வேந்தன் உயிரிழந்ததுபோலவே அரசியலில், வேடத்தைக்கண்டு மயங்கி, அந்த வேடதாரிகள், நற்பொருள்தர வந்திருக்கிறார்கள் என்று நம்பிக்கைக் கொண்டு, பிறகு தமது உரிமையை நாசம் செய்து கொள்ளும் மக்கள், இதுபோது உள்ளனர்.

யாருக்கும், ஏதேனும் ஓர் பொருளின்மீதோ, பற்று மிகுதியாக இருப்பின், அவர்களை, எத்தர்கள் ஏய்க்க எண்ணும்போது, எதன்மீது அவர்களுக்குப் பிரியம் அதிகமோ, அதேபோல் கோலம் பூண்டு

வந்தே, ஏய்ப்பர் - ஏய்த்திருக்கின்றனர் - ஏய்த்துவருகின்றனர் - ஏமாளிகள் உள்ளவரையில் இத்தகைய எத்தர்கள் இருக்கத்தான் செய்வர். பற்று இருக்கத்தான் வேண்டும் ஏதேனும் ஓர் கொள்கையினிடம் - மரக்கட்டைகளாக இருத்தலல்ல மாந்தர்க்கழகு - ஆயினும், பற்று, நமக்குப் பகுத்தறிவையும் பாழாக்கும் மூடுபனியாகும்படியாக மாறிவிட, அனுமதிக்கலாகாது.

❃

இந்த மூடுபனியை ஓட்டித்தான் தம்பி! நாம் அறிவொளியைத் தந்திடவேண்டும்.

நெற்றியிலே உள்ள நீறு சரி; கழுத்திலே உருத்திராட்ச மாலை, சரி; மகிழ்ச்சி, மதித்திடுவோம்; ஆனால் கட்கத்தில் மூட்டையில் உள்ளது என்ன? என்று மட்டும் மன்னன் கேட்டிருந்திருப்பின், படுகொலை நேரிட்டிருக்காதே! அது போலவேதான் தம்பி! ஜனநாயகமா? மகிழ்ச்சி! வரவேற்கிறோம்! சோஷியலிசமா? மிக்க மகிழ்ச்சி! வரவேற்கிறோம்! ஆனால், இவர் யார்? அதோ அவர் யார்? இவருடைய நிலை என்ன, விலை என்ன, வேலை என்ன? அதோ அவருடைய இயல்பு என்ன, இருப்பு எவ்வளவு? இவர் போன்றோர் உள்ள இடத்திலா சோஷியலிசம் வளரும், மலரும்? என்று கேட்டிடத் தெளிவும் துணிவும் வேண்டும்! இல்லையேல், உரிமை படுகொலை செய்யப்பட்டுவிடும்!

விதை தூவினால் மட்டுமே, பயிர்! ஆனால் எங்கே தூவினால்? பாறைமீது தூவிய விதை, பறவைகளுக்கு! பயிர் ஆகிடாது!

நெல்லும் பதரும், ஒரே வடிவம்! நெல்லென்று எண்ணிக்கொண்டு பதரினை விதையாகத் தூவிடின், நிலம் தரமாக இருந்திடினும் முளை கிளம்பிடுமோ!!

பாறை மீது தூவிய விதைபோலவே இன்று காமராஜர் பேசிடும் ஜனநாயக சோஷியலிசம் உளது. இதனை உணருவதற்கு அதிகமான முயற்சியும் தேவையில்லை. அவருடைய உலாவின்போது உடன் இருப்போரைக் கண்டாலே போதும்.

> உடன் இருப்போர் ஊர்க் குடிகெடுப்போர் என்று மக்கள் அறிவர்! உடனிருப்போர், பிறர் உழைப்பின் பலனை உண்டு கொழுப்போர்; இதனை ஊரறியும்.

ஆனால் அந்த உத்தமர்களை, வைத்துக்கொண்டு சோஷியலிசம் பேசுகிறார், பெரியவர்! அவர்களும், ஆமாம்! சோஷியலிசத்தைத்தான் நாங்கள் ஆதரிக்கிறோம்!!-என்கிறார்கள்.

> இந்தியாவுடன் நட்பு வேண்டும் என்றுதான் சீனா கேட்கிறது!! எல்லையைக்கொத்திக் கொண்டே!!

இங்குள்ள முதலாளிமார்களும், ஏழையின் வாழ்வை வதைத்துக் கொண்டே, சோஷியலிச கீதம் பாடுகிறார்கள். மெய்ப் பொருள் நாயனார் கதை போலவே இருக்கிறது அவர்கள் ஏழை எளியோரிடம் காட்டிடும் சோஷியலிசக் கோலம்!!

காமராஜர், வேண்டுமென்றே கபட நாடகமாடி ஏழை எளியோர்களை ஏய்க்கிறார் என்று நான் கூறவில்லை, தம்பி எத்தனை அரசியல் கருத்து வேற்றுமை இருந்திடினும் அவர்மீது பழி சுமத்திடும் அளவுக்குத் தாழ்ந்து போகவும், தரக்குறைவு கொள்ளவும் நான் தயாராக இல்லை.

அவர் நரியைப் பரியாக்கிக் காட்ட முயலுகிறார்; முதலாளிகளை சோஷியலிஸ்டுகள் ஆக்கிக்காட்டுகிறார்

தென்பாண்டி மண்டலத்துக் காமராஜருக்கு நரி பரியான கதை தெரிந்திருக்க வேண்டும்!

**முகப்பில்:**

**செங்கற்பட்டு மாநாட்டு ஊர்வலச் சிறப்பும், வண்ண விளக்குகளின் அலங்கார முகப்பும்.**

திரிபுரமெரித்த விரிசடைக் கடவுள், குதிரை வாங்கக் கொடுத்த பணத்தை கோயிலுக்காகச் செலவிட்டு மன்னனின் சிற்றத்துக்கு ஆளாகி மருண்டு கிடந்த 'பக்தனை'க் காத்திட, நரி பரியாகும் திருவிளையாடலை நடாத்திக் காட்டினார் என்பர் புராணம் படிப்போர்.

குதிரை வாணிபனாக வடிவம்கொண்டு, காட்டினில் கிடந்த நரிகளைப் பரிகளாக்கி, மன்னனிடம் தந்து, அவன் மகிழ்ச்சிகொண்டு, அந்தக் குதிரைகளைக் கொட்டிலில் கட்டிவைத்திட, இரவு பரியாக மாறிக் கிடந்த நரிகள் பழையபடி நரிகளாகி, ஊளையிட்டுப் பாய்ந்து, ஏற்கனவே ஆங்கு இருந்த பரிகளைக் கடித்துக் குதறிவிட்டுக் காடுநோக்கி ஓடிவிட்டன என்பர்.

கண்ணுதற் பெருங்கடவுளாலேயே, நரியைப் பரிபோல் வடிவம் கொண்டிட மட்டுமே செய்திட முடிந்தது.

நரிகள் பரிகளாகிவிடவில்லை; நாதன் நடத்திய திருவிளையாடலின் போதேகூட!

ஆனால் காமராஜர், கனதனவான்களை, கள்ளச் சந்தையினரை, கொள்ளை இலாபமடித்திடுவோரை, சோஷியலிஸ்டுகள் ஆக்கிடமுடியும் என்கிறார்; நம்பச் சொல்கிறார்!!

ஆண்டவனே முயன்றாலும் நரி, பரியாகிவிடாது என்பதனைத் திருவிளையாடல்பற்றிய திருக்காதையே காட்டுகிறது-காமராஜரின் திருவிளையாடலிலா நம்பிக்கை கொள்ள முடியும்?

மக்களுக்கு நம்பிக்கை எழாது; நிச்சயமாக; ஆனால் ஒரு மயக்கம் ஏற்படும் அல்லவா? அதுபோதும் ஓட்டுகளைத் தட்டிப்பறித்திட என்று அவர் திட்டமிடுகிறார்.

அந்த மயக்கத்தைப் போக்கிடும் தொண்டினில் நாம் நம்மை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறோம். தன் திட்டத்தைத் தகர்க்கிறார்களே என்பதாலே அவருக்கு நம்மீது ஆத்திரம்! விநாடிக்கு விநாடி அந்த ஆத்திரம் வளருகிறது; பொங்குகிறது.

காமராஜர் தயவால் ஒரு புதிய வேட்டை கிடக்க இருக்கிறதே, அதனை இந்தப் 'பாவிகள்' கெடுத்துத் தொலைக்கிறார்களே என்பதை எண்ணிடும்போது முதலாளிமார்களுக்கு நம்மீது கோபம்--கொதிப்பு!

இந்த இரண்டு எதிர்ப்புகளையும் தாங்கிக் கொண்டுதான் நாம பணியாற்ற வேண்டி இருக்கிறது, நமது பணி பெரிது! பொறுப்பு அதனைவிடப் பெரிது! எதிர்ப்பு, பலவகையின, மிகப் பெரிய அளவினதுமாகும்!

"அப்படியா அண்ணா!" என்று ஆயாசக் குரலிலே கூறிடமாட்டாய், 'அதனால் என்ன அண்ணா' நான்தான் அந்தப் பணிக்கு என்னை ஒப்படைத்துவிட்டேனே! அஞ்சாதே அண்ணா! அறம் வெல்லும்!! என்று உறுதியுடன் பேசிடுவாய் என்பதை உணர்ந்தே தம்பி! உன்னை அழைக்கிறேன். வேறு யாரை நான் அழைப்பேன்!

அண்ணன்,

அண்ணாதுரை




2—21

## சிதாரியின் கண்ணீர்

சிதாரி சிரிப்பை அடக்கிக் கொண்டு, 'தூமகேது துப்பறிவதில் அசகாயசூரர்! எத்தனை அவதாரங்கள் எடுத்து வந்தாலும், அந்த ஆண்டவனாலும் அவரை ஏமாற்ற முடியாது! அவரது கண்களே தனிக் கூர்மைவாய்ந்தவை! எப்படிப்பட்ட இரும்புக் கோட்டையாக இருந்தாலும் அவை ஊடுருவிப் பார்த்துவிடும்! சிரித்துக்கொண்டேதான் பேசிக்கொண்டிருப்பார், ஆனாலும் எதிரிலிருப்போரின் உள்ளத்தில் வட்டமிடுவது என்ன என்பதைத் தெரிந்துகொள்ளக்கூடிய அலாதியான ஆற்றலும் அனுபவமும் பெற்றவர்! இவ்வாறெல்லாம் தூமகேதுவை அடிக்கடி புகழ்ந்து பேசுவீர்களே, அம்மா! அப்படிப்பட்ட சூராதிசூரரைச் சுலபத்தில் ஏமாற்றிவிட்டீர்களே!" என்று கூறினாள்.

"ஆமாம், என் நடிப்பால்-அவனை ஏமாற்றி—முன்பைவிட அதிக நம்பிக்கை கொள்ளும்படிச் செய்தேன்!"

"என்ன இருந்தாலும், இன்று நீங்கள் செய்த காரியமிருக்கிறதே, மிகவும் துணிச்சலானது அம்மா, மிகவும் துணிச்சலானது!

"அதனல்தான் பயந்துபோய் ஓடியொளிந்துகொண்டாய்?

கல்லடிபட்டதும், வேகமாக அவன் திரும்பியதும்......என்னைக் கண்டதும், அவன் முகத்தில் ஏற்பட்ட மாற்றங்களும் கண்கள் கக்கிய கோபக்கனலும்......ஆகா, அற்புதமான காட்சி! அந்தக் காட்சியைப் பார்க்காமல் பைத்தியக்காரியைப்போல, எங்கோ போய்ப் பதுங்கிக்கொண்டாயே! அவன் பேசியபோது, வார்த்தைகளில் எவ்வளவு சூடு இருந்தது தெரியுமா? கண்ணாடிக் கல்லை என்னை மாணிக்கக் கல்லாக்கிய மகானை உமக்கா நான் கேடு நினைப்பேன்—அப்படி நினைத்திருப்பேன் என்ற எண்ணம் தங்கள் மனதில் எழுந்ததற்கே காரணம், முன்ஜென்மத்தில் நான் செய்த பாவத்தின் விளைவே-என்று உருக்கமான குரலில் பேசினேன்! கோப[illegible]ரத்தைப் பார்த்து அடிக்க, அந்தக் கல் கண்கண்ட கடவுளான தங்கள் மீது பட்டுவிட்டதே என்று கண்களில் நீரைநிறுத்தி, ஒரு பொய்யை வீசினேன்! அவனது கோபமும் கொதிப்பும் ஓர்நொடியில் புகையாய் மறைந்துவிட்டன! அந்த வஞ்சகன் வழக்கம்போல் என்னைப் புகழ ஆரம்பித்தான்! அந்த நேரத்தில், புதிய பொய் ஒன்றை, அவன் எதிரில் தெரிவித்தேன்! அப்படியே ஒரே ஆச்சரியத்தில் மூழ்கிப்போய் விட்டான்!"

"அதென்னம்மா புதிய பொய்?"

"பொன்னையா தாம் நடத்த இருந்த புரட்சிக்காகப் பலரிடம் பொன் திரட்டினார் என்றும், அந்தப் பொன்னை எங்கோ பூமிக்கடியில் புதைத்து வைத்திருக்கிறார் என்றும், அந்த இரகசியம் சோலையப்பன் ஒருவருக்குத்தான் தெரியும் என்றும் கூறினேன்!"

"சரியான பொய்தான்!"

"அந்தப் புதையலைக் கண்டுபிடிக்க வேண்டுமானால், சோலையப்பன் விசாரணையை இன்னும் கொஞ்சகாலத்திற்குத் தள்ளிப்போட வேண்டும் என்று கேட்டுக்கொண்டேன்!"

"புதையல் என்றதும் அந்த மலைப்பாம்பு, அப்படியே 'ஆ' வென்று வாயைப் பிளந்துவிட்டிருக்குமே?"

"ஆமாம் சிதாரி! புதையல் என்றதும், அவன் நாக்கில் நீர் கசியத் தொடங்கிவிட்டது! ஆனந்தத்தால் கண்கள் ஒளி[illegible]க்க ஆரம்பித்துவிட்டன! அந்த இரகசியத்தைக் கண்டுபிடிக்க வேண்டுமென்றால்—சோலையப்பனின் மனத்தைக் குழப்ப வேண்டுமென்றால — இரவிலகூட நான் சிறைச்சாலைக்குச் செல்ல வேண்டியிருக்குமே என்றேன! நீ எந்த நேரத்திலும் சிறைக்குள் செல்லலாம் என்று அனுமதி கொடுத்துவிட்டான்! சிதாரி, எதிர்பாராத நல்லதோர் வாய்ப்பு இப்பொழுது கிடைத்திருக்கிறது!" இதைச் செவ்வனே பயன்படுத்திக் கொள்ளவேண்டும்! அப்படிப் பயன்படுத்திக் காள்வதில்தான் இருக்கிறது, என் எதிர்காலம்! நாளைய தினம் தூமகேது வெளியூருக்குச் செல்கிறான், திரும்பிவர நாலைந்து நாட்கள் பிடிக்குமாம்! அதற்குள் எப்படியாவது அத்தானை, சிறைச்சாலையை விட்டு வெளியே கொண்டு வந்துவிட வேண்டும்!"

"எல்லாம் செய்யலாம்—செய்யவும் முடியும் தங்களால்! ஆனால் அவர் உம்மை நம்பவேண்டுமே, அம்மா?"

"மாரிமுத்துத்தான் உண்மையை அத்தானிடம் எடுத்துக் கூறுவதாக, உறுதிமொழி தந்திருக்கிறாரே!"

"அம்மா! நான் சொல்வதற்காக என்னை மன்னிக்கவேண்டும்! பிறர் செய்தி என்றால், மிகவும் நுட்பமாக ஒவ்வொன்றையும் கண்டுபிடித்து விடுகிறீர்கள்! அதுவே தங்களது சொந்தக் காரியம் என்றால் ஏனோ குழப்பமடைந்துபோய், எதையும் தவறாகவே செய்து விடுகிறீர்கள்! சோலையப்பனை வீட்டிற்கு இரவில் வரவழைத்தது தவறு என்றேன்! கேட்கவில்லை! என்னவாயிற்று?"

"இந்தச் சமயத்தில் அதையெல்லாம் எண்ணி, எதற்காக உன்னை நீயே குழப்பிக் கொள்கிறாய்?"

"குழப்பிக் கொள்வது நான் அல்ல அம்மா!"

"அப்படியானால் நான்தான் என்கிறாயா?"

"அதில் சந்தேகமும் இருக்கிறதா? இல்லாவிட்டால், மாரிமுத்துவை நம்பி, ஏதேதோ, மனக்கோட்டைகள் கட்டத் தொடங்குவீரா?"

"அதென்ன சிதாரி, இப்படி திடீரென்று ஒரு கல்லைத் தூக்கிப் போடுகிறாய்?"

"எனக்கென்னமோ, மாரிமுத்து மீது சந்தேகம் சந்தேகந்தான்!"

"நீதானே அவரது உதவியைப் பெற்று, அத்தானின் மனத்தை மாற்றமுடியும் என்று யோசனை கூறியவள்?"

"இல்லையென்று கூறவில்லை! அவரைக் கண்டு பேசியபிறகு அந்த நம்பிக்கை என் மனத்தினின்றும் செத்துவிட்டது! அவருக்குத் திடீரென்று அதிர்ச்சியும் அச்சமும் உண்டாயிற்று அல்லவா, 'நீங்கள் சோலையப்பனின் நண்பர் அல்லவோ என்று தாங்கள் சொன்னதும், உண்மை தங்களுக்குத் தெரிந்துவிட்டிருக்கிறதே என்பதினால்தான் அவர் சமயத்திற்குத்தக்கபடி சாகசமாகப் பேசினார் என்பது என் எண்ணம்! யாருக்கும் தெரியாது என்று எண்ணிக்கொண்டிருந்த இரகசியத்தைத் தாங்கள் கண்டுபிடித்துவிட்டீர்களே என்பதினால் அவர் மனத்தில் பயம்தோன்றிவிட்டிருக்கிறது. அந்தப் பயத்தினால்தான் தாங்கள் சொல்லியதற்கெல்லாம் 'சரி சரி' என்று அவர் தலையாட்டினார் என்று நான் நினைக்கிறேன்! அவர் தங்களுக்கு நன்மை செய்யாவிட்டாலும், தீமை செய்யாமல்விட்டால் போதும் என்ற கவலை எனக்கு உண்டாகிறது!"

"இதென்ன பைத்தியக்காரியைப் போல உளற ஆரம்பித்துவிட்டாய்? மாரிமுத்து உத்தமர்—உண்மையானவர்! அவர்மீது சந்தேகங்கொள்வதே தவறு!"

"எப்பொழுதுமே நான் சொல்வதெல்லாம் காலங் கடந்துதானே தங்களுக்குப் புரிவது வழக்கம்? இப்பொழுது மட்டும் நான் சொல்வதை, நீங்கள் எப்படி ஒத்துக்கொள்வீர்கள்?"

"ஒத்துக்கொள்வதும் கொள்ளாததும் இருக்கட்டும் — எதைக்கொண்டு மாரிமுத்து நமக்குத் தீமை செய்வார் என்று நீ நினைக்கிறாய்?"

"தங்களது பழைய கால நிகழ்ச்சிகளைக் கொண்டுதான் சொல்கிறேன்!"

"புரியும்படி சொல் சிதாரி!"

"சோலையப்பனிடம் தாங்கள் எப்படி நடந்துகொண்டீர்? அவரிடம் தூமகேதுவைப் பற்றி எவ்வளவு கேவலமாகத் திட்டிப் பேசினீர்? கடைசியில் சிறையில் அடைபட்ட சோலையப்பனைக் கேலி செய்தீர் — தூமகேதுவின் பக்கத்தில் நின்றுகொண்டு! இவற்றை மாரிமுத்து நினைத்துப் பார்க்கமாட்டார் என்று கருதுகிறீரா? முள்ளை முள்கொண்டுதான் எடுக்கவேண்டும் என்பதைப்போல - நயவஞ்சகத்தை நயவஞ்சகத்தால்தான் மடக்கவேண்டும்—நடிப்பை நடிப்பால்தான் தோற்கடிக்கவேண்டும் என்ற எண்ணத்தில். அவர் தங்களிடம் அப்படி நடந்துகொண்டிருந்தாலும் இருக்கலாம் அல்லவா? தூமகேதுவின் ஏவலால்தான் இப்படியெல்லாம் நடக்கிறீர் என்று கருதி தங்களையும் முந்திக்கொள்ள வேண்டுமென்ற திட்டத்தோடு, ஒற்றர் நாயகத்தினிடம் நடந்ததைக் கூறி, அவர் தப்பிக்கப்பார்க்கலாம் அல்லவா? அதனால் எதிர்பாராத தீமைகள், தங்களுக்கு உண்டாகலாம் அல்லவா?"

இவ்வாறு சிதாரி செல்லியதைக் கேட்டு, கவலையும் வெறுப்புங் கொண்ட செந்தாமரை, அங்கிருந்த கல்லாசனத்தின் மீது உட்கார்ந்தாள்.

அந்தக் கல்லாசனத்திற்குப் பக்கத்தில், செக்கச் சிவந்த மலர்கள் கொத்துக் கொத்தாக இருந்த அலரிச் செடி ஒன்று இருந்தது. அந்த அலரிச் செடியைச் சுற்றி ஏறியிருந்த சங்குக் கொடியினின்று ஒரு பூவை செந்தாமரை பறித்தாள். அந்த நீல நிற மலரைப் பார்த்தபடி அவள் மௌனமாக இருந்தாள்.

சிறிது நேரம் சிதாரியும் ஒன்றும் பேசவில்லை. வெள்ளை முயலைத் தடவிக்கொடுத்தபடி நின்றிருந்த அவள் மனத்தில், ஏதோ ஒருவித ஏக்கம் புகைந்து கொண்டிருந்தது.

சோலையப்பன் எப்படியும் விடுதலையாகக்கூடாது என்பதிலேயே, சிதாரிக்கு அதிக நாட்டமிருந்தது. மாரிமுத்து நல்லவனோ நயவஞ்சகனோ — அதை அறிந்துகொள்ள வேண்டிய கவலையை, அவள் எடுத்துக்கொள்ளவில்லை.

சோலையப்பனின் அன்பை இனி பெற முடியாது என்பது நன்றாகத் தெரிந்துவிட்ட பிறகு, இனி ஏன் வாழவேண்டும் என்ற முடிவிற்குச் செந்தாமரை வந்துவிட்டாள். அவளைத் தற்கொலை செய்துகொள்ளாமல் தடுக்கவேண்டுமானால், நம்பிக்கையாக எதையாவது கூற வேண்டுமே என்றுதான் மாரிமுத்துவை நினைவுபடுத்தினாள், சிதாரி. ஆனால் அவசரப்பட்டு அப்படிக் கூறிவிட்டதற்காகப் பின்னர் அவள் தன்னைத்தானே பல முறை நொந்துகொண்டதுண்டு.

சோலையப்பனுக்கு விடுதலை கிடைக்கக்கூடாது. இனி அவன் வெளியில் நடமாடக்கூடாது! அப்படி நடமாடினால், அவன்மேல் கொண்ட காதல்போதையில் செந்தாமரை தன் சபதத்தை மறந்து விடுவாள்! கணவன்—காதல் என்ற சுழலில் அவள் திரும்பவும் சிக்கிக் கொண்டால், அதனின்றும் எந்தச் சக்தியினாலும் அவளை மீட்கமுடியாது! செந்தாமரை உயிர்வாழ்வது, காதல் புரியவும் கணவனோடு இல்லறம் நடத்தவுமா? இல்லையே! அவள் செய்து முடிக்கவேண்டிய மகத்தான பணி வேறு இருக்கிறதே! ஆயிரமாயிரம் வீரர்களாலும் சாதிக்க முடியாமல்போன. அப்படிப்பட்ட காரியத்தைச் சாதித்துக் காட்டுகிறேன் என்றல்லவா சபதம் எடுத்துக்கொண்டாள்! அப்படிப்பட்ட வீராங்கனை வீழ்ந்துவிட்டாளே காதல் பள்ளத்தில்! அந்தப் பள்ளத்தினின்றும் கரை ஏற்றி. எடுத்துக்கொண்ட பணியினை வெற்றிகரமாக முடிக்கும்படி அவளைச் செய்யவேண்டாமா? அந்த வேலையினைச் செய்ய, என்னைவிட வேறுயார் இருக்கிறார்கள்?"

இவ்வாறு சிதாரியின் மனத்தில், சிந்தனையோட்டமிருந்தது.

சங்குப் பூவினின்றும் பார்வையைச் செந்தாமரை உயர்த்தி, 'இந்த உலகில் யாரைத்தான் நாம் நம்புவது?' என்று கேட்டாள்.

"எதற்கம்மா, பிறரை நாம் நம்பவேண்டும்?" என்று சிதாரி, எதிர்க்கேள்வி போட்டதும் அருகிலிருந்த விசிறி வாழையின் பின்பக்கமிருந்து மாரிமுத்து எழுந்து வெளியே வந்தான்!

(வளரும்)

**காரணம்!**

கடந்த காலத்தில், காங்கிரஸ் செய்திருக்கிற ஊழல்களை, கழகம் கண்டுபிடித்துவிடுமோ என்றுதான் கழகத்தையும், அதன் கூட்டணியையும் சிதைக்கவும், உடைக்கவும் காங்கிரஸ் பேசி, செயல்படுகிறது.

-- ஈ. ஆர். கிருஷ்ணன்.
(செங்கையில்)

4-ம் பக்கத் தொடர்ச்சி

அரசியல் நாணயக்குறைவுபற்றியும் சிந்திக்கத் தந்தார், சி. பி. சிற்றரசு செங்கையில்!

**சி. வி. ராசகோபால் எம். எல். சி.,** யுத்தத்துக்குப்பின், ஜப்பான் சீரழிந்த நிலையையும், தற்போது அது அடைந்துள்ள செழுமைமிக்க வளம்பற்றியும், அதே கால அளவில் இந்நாடு அடைந்துள்ளசீரழிவு பற்றியும் ஒப்பிட்டுக் காட்டினார் வடமாநாட்டில்!

தேவநாகரி லிபியால் 'தமிழ்' என்றுகூட எழுதமுடியாத நிலையிருக்க, தமிழையே தேவநாகரிலிபியில் எழுத நடவடிக்கை எடுக்கக் கூறும் காங்கிரசின் மொழி வெறியையும், இந்தித்திணிப்பின் தன்மையையும், ஏமாற்று நிலையையும் விளக்கிப்பேசினார் கந்தப்பன் எம். பி.

எம். ஜி. ஆர். பேசும்போது, கழகத்தின் வளர்ச்சி பற்றியும், அது 1967ல் அடையப் போகும் மகத்தான வெற்றி பற்றியும் நன்றாக உணர்ந்து கொண்டிருப்பதனால்தான், காங்கிரசார் செயல்களில், மிருகத்தனமும், மிலேச்சத்தனமும் கலந்திருக்கிறது எனக் கூறி, இனி மக்கள் கழகத்தை ஆதரிப்பதைத் தவிர, தங்கள் விடிவுக்கு வேறு வழியில்லை என்று விளக்கினார். கழகப் பிரசாரத்திற்குத் தானும் படம் எடுக்க இருப்பதாக அறிவித்தார்.

**கி. மனோகரன்,** தன் கனடா நாட்டுப் பயணம் பற்றிக் குறிப்பிடுகையில், கனடா நாட்டு வளப்பம், செழிப்பு பற்றியும், அமெரிக்க நாட்டு குபேரத்துவத்தால், மக்களுக்கு 'பாச' உணர்வை ஊட்ட முடியாதிருப்பதையும் விளக்கிக் காட்டினார்.

பெய்ரூட்டில், தான் பயணம் செய்து கொண்டிருந்தபோது. ஒருவர் தன்னை யழைத்து இந்தியக் கரன்சிகள் தேவையா யெனக் கேட்டதாகவும், நாணய மதிப்புக் குறைப்புக்குப் பின், 21 ரூபாய் பெறுமானமுள்ள இங்கிலாந்து நாட்டு பவுண்ட் 1-க்கு இந்தியக் கரன்சி ரூ. 30- தருவதாகக் கூறியதாகவும், இந்த இந்தியக் கரன்சிகள், இந்நாட்டிலிருந்து கள்ளக் கடத்தல் மூலமே அங்கு வருவதாகவும் அவர் தெரிவித்ததாகவும் எடுத்துக் காட்டி, நாட்டு நிலையைப் படம் பிடித்துக் காட்டினார்.

**எஸ். எஸ். ஆர்.** பேசும்போது, காங்கிரசார் படம் எடுக்க இருப்பது பற்றிக் குறிப்பிட்டு, கழகம் படம் எடுத்தால், அதன் நிலை பற்றியும் விளக்கிவிட்டுத் தன் புதிய தேர்தல் பிரசார நாடகத்தின் மூலம், கழகத்துக்குத் தன் முழுநேர சேவை நல்க இருப்பதுபற்றி விளக்கினார்.

செங்கை மாநாட்டில் இறுதியாக உரையாற்றிய நாவலர் **நெடுஞ்செழியன்**—

எழுத்துக்கு எழுத்து, செயலுக்குச் செயல், சொல்லுக்குச் சொல் சந்திக்க வேண்டியவர்களாக நாம் இருக்கிறோம்;

வரி விதிப்பு எவ்வளவு, பணக் குவிப்பு எவ்வளவு, பரவலாக வரிப் பணம் செலவிடப்படாததேன்? தாய் மொழி, அரியாசனத்தில் அமர்த்தப்படாததேன்? மாநிலங்களுககு சம உரிமையும், அதிக அதிகாரங்களும் தரப்படாதது எதனால்? டெல்லியில் அதிகாரம் எப்படியெல்லாம் குவிந்திருக்கிறது? என்பதனையெல்லாம் கழகம்தான் எடுத்துக் காட்டி வருகிறது.

இதன் மூலம் நாம் எதிர்க்க இருப்பது சாதாரண ஆளையல்ல. சர்வ வல்லமை பெற்றவர்களை எதிர்க்கிறோம். வேலைகளை நமக்குள் பிரித்து பங்கிட்டுக்கொண்டு பணியாற்ற வேண்டும்; பணபலத்தை முறியடிக்க வேண்டும் என்று கூறினார்.

வடமாநாட்டில் முதல் நாள் இறுதியாக **அண்ணா அவர்கள்**—

"வருகின்ற 1967-ல் ஆட்சியிலிருக்கின்ற காங்கிரசு அகற்றப்பட்டு, கழகம் ஆட்சிக்கு வந்துவிடுமோ — என்ற சந்தேகம் பலருக்கு வந்திருக்கிறது! கழகம் ஆட்சிக்கு, வந்துவிடுமே என்ற அச்சம் சிலருக்கு வந்திருக்கிறது! கழகம் ஆட்சிக்கு வந்துவிடுமென்ற ஆவலும் பலருக்கு ஏற்பட்டிருக்கிறது! ஆனால் எனக்கு அந்த ஆவலும் இல்லை—எந்தவித அச்சமும் இல்லை —துளி அளவு ஐயப்பாடும் எனக்கு ஏற்படவில்லை!

"காரணம், நீங்கள் எங்களிடத்தில் ஆட்சியை ஒப்படைத்தால் ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்கிறேன! 'பொறுத்துக் கொள்' என்றால் அதற்காக நான் பதறிவிடப் போவதில்லை!

"நான் உங்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், '1967-ல் கழகம் ஆட்சிக்கு வருமா—வராதா?' என்பது தான்! 'புதிய ஆட்சி வேண்டுமா—வேண்டாமா?' என்பதுதான்!

"இத்தனை ஆண்டுகளாக அரசியல் வாதிகள் பேசியதை நீங்கள் கேட்டுக் கொண்டிருந்தீர்கள், ஆனால், இப்போது நாங்கள் உங்களைக் கேடகிறோம்— '1967-ல் காங்கிரசைமீண்டும ஆட்சிக்குக்கொண்டு வரப்போகிறீர்களா? கொடுமைகளையெல்லாம் இன்னும் தாங்கிக்கொள்ளப் போகிறீகளா? கொடுமைகளைத் தாஙகிக் கொள்கிறோம்' என்றால் பரவாயில்லை; 'இனி எங்களால் தாங்க முடியாது' என்று நீங்கள் கருதுவீாகளானல், புதிய ஆட்சி ஏற்பட்டே தீரும்! புதிய ஆட்சி ஏற்படுவதற்கான சக்தி எங்களிடம் இல்லை; உங்களிடம் தான் இருக்கிறது!"

திராவிட முன்னேற்றக் கழகத்தில் விவசாயிகள் இருக்கிறாகள்; தொழிலாளர்கள் இருக்கிறார்கள்; நடுத்தர மக்கள் அங்கம வகிக்கிறார்கள்; அரசாங்க அலுவலகத்தல்

---

3-ம் பக்கத் தொடர்ச்சி

ஏழை, எளியவர்களை ஏமாற்ற ஏழையைப்போல் நடிக்கத் தொடங்கி இருக்கிறார் முதலமைச்சர் என்று தான் நம்பவேண்டியிருக்கிறது.

இல்லையென்றால், ஆட்சியையும், அதிகாரத்தையும் கையில் வைத்துக்கொண்டுள்ளவர் —

விலை உயர்ந்துதானிருக்கிறது

— என்று கூறிக்கொண்டிருக்கமாட்டார். நாட்டு நலனிலும், ஏழையர் வாழ்விலும் உண்மையான அக்கறை இருக்குமானல், அடுத்த ஐந்தாண்டுக் காலத்தைப் பற்றிக் கவலைப்படாமல், விலை உயர்வுக்குரிய காரணங்களைக் கண்டுபிடித்து, குறைப்புச் செய்வதற்கான நடவடிக்கையில்தான் ஈடுபட்டிருக்கவேண்டும்.

விலை உயர்வுப்பிரச்னை தேசியப்பிரச்னை யென்றோ மத்திய அரசுதான் இதனைச் செய்யவேண்டும் என்றோ கூறுவாரானல், இம்மாதிரியான ஏமாற்றுப் பேச்சுக்கள் பேசுவதையும் போலி நாடகமாடுவதையும் நம்பி, இனியும் ஏழை, எளியவர் இடர்ப்பாட்டுககாளாகத் தயாராயில்லை என்பதை கனம் முதலமைச்சர் புரிந்து கொள்ளவேண்டும்.

பணியாற்றுவோர் ஆதரவு தருகிறார்கள்; பெரிய பெரிய தொழில் அதிபர்களிடம் கணக்கு எழுதுபவர்கள் நிரம்ப இருக்கிறார்கள்; வழக்கறிஞர்கள், நல்ல மருத்துவர், திறமை மிகுந்த ஆசிரியர்கள் இருக்கிறார்கள்; கலைஞர்களும் தேர்ச்சி பெற்ற இசை உலகப் பெரியவர்களும் ஏராளமாக இருக்கிறார்கள்!

இப்படி, எல்லா தரப்பட்ட மக்களின் நல்லாதரவும் பெற்று வளர்ந்துவரும் கழகத்தின் தரமும் நாளுக்கு நாள் வளர்ந்துவருகிறது!

கழகம் வளருகிறதென்றால், சனநாயகம் வளருகிறதென்றுபொருள். சனநாயகம் வளருகிறதென்றால், அரசியலில் நல்ல பண்பாடு வளர்கிறதென்று பொருள்!

சென்னையிலிருந்த என்னைச் சந்திப்பதற்காக ஜெர்மனியிலிருந்து ஒரு பத்திரிகை நிருபரும், 'இந்துஸ்தான் டைம்ஸ்' என்ற பத்திரிகையின் நிருபரும், வேறொரு பத்திரிகையின் நிருபருமாக மூன்று பேர்கள் வந்திருந்தார்கள்; ஜெர்மன் நிருபரைப் பார்த்துக் கேட்டேன்—'ஐயா, நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்?' என்று, அவர், 'எர்ணாகுளத்திலிருந்து' என்று பதில் சொன்னார்; 'எர்ணாகுளம் சென்ற நீங்கள் என்னைப் பார்க்க ஏன் வரவேண்டும்?' என்று கேட்டேன்; அதற்கு அவர், 'அங்கே போனதால்தான் இங்கே வரவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது' என்றார்.

அதோடு அந்த ஜெர்மன் நிருபர் நிறுத்தவில்லை; மேலும் அவர் சொன்னார்—'அங்கே காங்கிரசுத் தலைவர்களை நான் தனித்தனியாகவும், கூட்டாகவும் சந்தித்துப் பேசிக்கொண்டிருந்தபோது அவர்கள் மூன்று எழுத்துக்களைச் சதா உச்சரித்துக் கொண்டிருந்தார்கள்' என்றார்; அவர், 'அங்கே...' என்று கூறிய போது 'என்ன அது?' என்று நான் கேட்டேன்; அதற்கு அவர், "அது தான் 'டி. எம். கே.—டி. எம். கே.—டி. எம். கே.' என்று சதா கூறிக் கொண்டிருந்தார்கள்; அதனால்தான் அங்கே போயிருந்த நான் இங்கே வரவேண்டிய அவசியம் ஏற்பட்டது" என்று சொன்னார்.

'இந்துஸ்தான் டைம்ஸ்' நிருபர் நீங்கள்தான் அடுத்த தேர்தலில் ஆட்சிப் பொறுப்பை ஏற்பீர்கள் என்ற கருத்து பலமாக ஏற்பட்டிருக்கிறதே—அதைப்பற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?' என்று கேட்டார்; என்னால் இதற்கு எப்படிப் பதில் கூறமுடியும்? என்றாலும், உடனே நான், 'உங்களுக்கு இந்த எண்ணம் எப்படி ஏற்பட்டது என்று கேட்டேன்; அதற்கு அவர், 'அடுத்த தேர்தலில் காங்கிரசு ஆட்சி குசராத்தில் போய்விடும்; கேரளத்தில் எதிர்பார்க்க முடியாது; தமிழகத்தில், ஆட்சி எதிர்கட்சிக்குத்தான் போய்ச் சேரும் என்று பேசிக்கொள்கிறார்கள்' என்றார்; 'பெரிய இடத்திலே பேசிக்கொள்கிறார்கள்: யார் புண்ணியத்திலாவது அது நடக்கும், என்று நான் கூறினேன்.

உலகமே எதிர்பார்க்கிற ஆட்சி மாற்றத்தை நீங்கள் தெளிவாகப் புரிந்துகொண்டு நல்ல முறையில், பதிலளிக்க வேண்டுமானால் நாம் முறையோடு பணியாற்ற வேண்டும்.

நமது நேரம்—திறைப்பு—உழைப்பு ஆகியவற்றை ஒருமுகப்படுத்தி கழகப் பணிக்கென்று நம்மை நாமே ஒப்படைத்துக் கொண்டால்—இடையிலே இருக்கின்ற நான்கு மாதங்களில் முனைந்து பணியாற்றினால்—என்னதான் காமராசர் கோடி கோடியாகப் பணத்தைச் சேர்த்து வைத்துக்கொண்டு வந்தாலும், தமிழ்நாட்டில் கழகத்தின் செல்வாக்கைக் குறைக்கமுடியாது! கழகத்தின் வெற்றி வாய்ப்பைக் காமராசராலும், காங்கிரசுக்காரர்களாலும் நிச்சயம் தடுக்க முடியாது!"

—என்று விளக்கிவிட்டு—தென் மாநாடு சென்று, அங்கே—

"பாம்புப் புற்றையும் வளர்ப்பேன்; விஷத்தை இறக்கும் பச்சிலையையும் வளர்ப்பேன் அதற்குப் பக்கத்தில் என்பதைப்போலத்தான் சோசலிசம் பேசிக்கொண்டு பணக்காரர்களை வளர்க்கிறார்கள் காங்கிரஸ்காரர்கள்.

ஊரிலே திருப்பதிக்குப் போகிறவர்கள் கோவிந்தா சப்தம்போட்டுக் கொண்டு வந்தால்—சில வைதிகத் தாய்மார்கள் வீட்டுக்கு வீடு நின்றுகொண்டு கையெடுத்துக் கும்பிடுவார்கள்.

ஆனால் கோவிந்தா சப்தம்போட்டுக்கொண்டு வருபவர்கள்—சமுத்தறுத்த கந்தன்—அகப்பட்டதைச் சுருட்டும் ஆறுமுகம் முடிச்சவிழ்ப்பதில் மாநிலத்திலேயே முதல் ஆளான முனியப்பன்—என்றால் தாய்மார்கள் கையெடுத்துக் கும்பிட மாட்டார்கள்.

அதுபோல காமராசர் ஏற்பாடு செய்த படஜனைக் கோஷ்டியே இந்த சோசலிஸ்ட் கோஷ்டி: அதில் எவன் முதல்தர அயோக்கியனோ—அவனே முதல்தர ஆள்!

காங்கிரஸ் ஆட்சியை, மாற்ற முடியுமா — மாற்றக் கூடாது என்ற அரசியல் வைதிக எண்ணம் சிலருக்கு இருக்கிறது. இந்த அரசியல் வைதிக எண்ணத்தை 67 தேர்தலில் மாற்றியே தீருவோம்.

பணக்காரர்களிடமிருக்கின்ற பணத்தைப் பறித்து அதை ஏழைகளுக்குப் பங்கிட்டுத்தருவது மட்டுமல்ல இந்த சோசலிசம்.

செல்வம் முழுவதும் பரவலாக மக்களுக்குப்போய்ச்சேரவேண்டும்; ஒரே பணக்காரர்களிடம் மட்டும் போய்ச் சேர்கின்ற வாய்க்கால்களை வழிகளை அடைப்பதுதான் எங்கள் சோசலிசம்.

அகில இந்தியக் காங்கிரஸ் தலைவராகவிருந்த காமராசர் பணக்காரர்கள் மேலும் பணக்காரர்கள் ஆகிவிட்டார்கள் என்பதை ஒப்புக் கொள்கிறார். ஆனால் ஏழை மேலும் ஏழையாகவிட்டான் என்பதை ஒப்புக்கொள்ளவில்லை.

அதே சமயத்தில் ஏழையாகவே இருக்கிறான் என்பதை அவர் ஒப்புக்கொள்கிறார். 19 வருடகால காங்கிரஸ் ஆட்சியில் ஏழைகள் ஏழைகளாகவே இருக்கவேண்டுமா?

"இதற்காகவா பாரதியார் பாடினார்? வ. உ. சிதம்பரனார் செக்கிழுத்தார். சித்திரவதைப்பட்டார்; மகாத்மா காந்தியார் தவமிருந்தார். ஆயிரக்கணக்கான தியாகிகள் நாட்டுக்காக உயிர்விட்டார்கள்" என்று குறிப்பிட்டார்கள்.

வடக்கிலும், தெற்கிலுமாக நடைபெற்று முடிந்த இரு மாநாடுகளும் கழகத்தின் வரலாற்றில் குறிப்பிடத்தக்க இடம் பெறுபவை.

இரு மாநாடுகளிலும் தொண்டர்களின் சீரிய பணியும், அவர்களுக்குத் தலைமை யேற்றவர்களின் சிறந்த சேவையும் பாராட்டத்தக்க விதத்தில் அமைந்தது.

—சீயேயெம்.

சின்ன காஞ்சிபுரம் 86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், உரிமையாளர் சி. என். ஏ. இளங்கோவனால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. ஆசிரியர் சி. என். அண்ணாதுரை.